# ஈழத்துச் சொற்பொழிவுகள்

தவத்திரு குன்றக்குடி அடிகளா

(1968)

# ஈழத்துச் சொற்பொழிவுகள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ்ப்பண்ணை
சென்னை-17

ஜனவரி 1968

விலை ரூபாய் ஒன்று

அச்சிட்டது :
ஸ்ரீ அகஸ்தியா பிரிண்டர்ஸ்
சென்னை - 35

இந்நூல் *1968*, ஜனவரி மாதம், சென்னை மாநகரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளியிடப்பட்டது.

This book was published in January, 1968, on the eve of the Second world Tamil Conference held at Madras.

# EZHATHU CHORPOZHIVUGAL
(Lectures Delivered in Ceylon)

By
THAVA THIRU. KUNRAKKUDI ADIGALAR

Compiled by
EZHATHU SIVANANDAM

Published by
THAMIZH PANNAI
Madras-17

# இலக்கியப் பயணத்தில் ஒரு மைல் கல்!

(சமயத் துறைத் தலைவர் என்றால், குறிப்பாக, மடாலய மொன்றின் தலைவர் என்றால், சாதாரண மக்கள் நெருங்கிப் பழகவோ தொடர்பு கொள்ளவோ இயலாத நிலையில் ஒதுங்கி வாழ்பவர் என்பது நீண்ட காலமாக இருந்து வரும் மரபு. இந்த மரபுவழி மயக்கத்தைத் தகர்த்தெறிந்த தகைமையாளர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள்.)

அப்பெரியாருடைய திருநாமத்தைக் கேள்விப்பட்டேனும் இராத தமிழர் எவரும் இலர் என்றே கூறிவிடலாம். அந்த அளவுக்கு அவர்கள் மக்களிடையே உறவு கொண்டு, சமயத் துறைத் தலைமைப் பொறுப்பினை ஈடு இணையற்ற வகையில் நடத்தி வருகின்றார்கள்.

தவத்திரு. அடிகளார் அவர்களின் கல்வி ஞானம் கடலினை ஒத்தது; அவர்களின் ஆராய்ச்சிப் புலமை இமயம் போன்றது; அவர்களின் சமயக் கருத்துக்கள் ஒளி ஞாயிறு எனத் திகழ்பவை; அவர்களின் சமுதாயச் சிந்தனைகள் கைதேர்ந்த மருத்துவரின் முறைகளை நினைவு படுத்துபவை.

தவத்திரு. அடிகளார் அவர்கள் சமயநெறி முறைகள், இறைமை உணர்வு, ஒழுக்க மரபுகள் ஆகியவை குறித்து விளக்க உரை தருகின்றார் என்றால், நாத்திகர் என்று தம்மை அழைத்துக் கொள்ளுவோரும் மனம் மாறுவதைப் பலமுறை கண்டிருக்கிறோம்.

'சமய நெறி பகுத்தறிவுக்கு மாறுபட்டது அன்று' என்பதே தவத்திரு. அடிகளார் தரும் விளக்கங்களுக்கு அடிப்படை ஆகும். இந்த அடிப்படை உறுதியானது; ஐயம் திரிபுக்கு இடம் தராதது.

தவத்திரு. அடிகளார் அவர்களின் சொற்பொழிவு, கேட்போரை ஈர்க்கும்; மயக்கமுற்ற மனத்தைத் திருத்தும்; சந்தேகப் பிரகிருதிகளுக்குத் தெளிவு தரும்; சமுதாய உயர்வுக்கு வழிகோலும்; வாழ வேண்டியவர்களின் சார்பாக முழங்கும்.

அப்பெரியார் அவர்கள் இலங்கையில் நிகழ்த்திய பேருரைகள் சிலவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவதைப் பெரும்பேருகக் கருதி மகிழ்கின்றோம். தமிழர் உலகம் இதனை விரும்பி வரவேற்கும் என்பது உறுதி.

இந்த நூலினை மிகச் செம்மையாகத் தொகுத்தளித்த திரு. ஈழத்துச் சிவானந்தம் அவர்களுக்கு எங்கள் நன்றி.

தவத்திரு. அடிகளார் அவர்களின் நல்லாசிகளைத் தமிழ்ப் பண்ணை பணிவன்புடன் வேண்டுகிறது.

தனது நீண்ட கால இலக்கியப் பயணத்தில், ஒரு மைல் கல்லாக இந்த நூலினைக் காணுவதில், தமிழ்ப்பண்ணை மிகவும் மகிழ்ச்சி அடைகிறது.

தமிழ்ப்பண்ணை
சென்னை-17
30-12-67

சி. அ. கருணாநிதி

# அணிந்துரை

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கத் தொண்டாற்றி வருபவர் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனகர்த்தர் தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்.

"சமயம் என்பது பொழுது போக்குவதற்காப் பேசுகின்ற வரட்டு வேதாந்தமல்ல, அது வாழ்க்கையை அறநெறியில் செம்மையுறச் செய்யும் சிறப்பு வாய்ந்தது" என உலகெலாம் உணர்த்தி வருபவர்கள் அடிகளார்.

தமிழ் நாட்டில் அடிகளார் பேசாத கழகமோ, சங்கமோ, மாநாடோ இல்லை எனலாம். மக்களுடன் ஒன்றிப்பழகித் துற விக்கும் சமூகத்துக்கு மிடையே இருந்துவரும் பெருவெளியைச் சுருங்கச் செய்து வரும் பெருமை குன்றக்குடி அடிகளாருக்கே உரியது.

(அருள் நெறித் திருக்கூட்டம் ஒன்றைத் தமிழகத்திலும் ஈழநாட்டிலும் அமைத்து இளைஞர்களிடையே இறை பக்தியை ஊட்டி, சைவமும் தமிழும் உய்யக் காலத்துக்கேற்ற தொண்டு களில் சைவ உலகை ஈடுபடச் செய்துவருபவரும் அடிகளார் அவர்களே.)

"ஞானிகளது கடமை, உலகத்தைத் துறப்பது அல்ல; உலகை அறிவதே அவரது கடமை" வள்ளுவரும் இதை ஆணித் தரமாகக் கூறியுள்ளார். "உலகத்தை வெறுக்கும் தன்மையல்ல; சிறந்த உலகை உருவாக்குவதே ஞானிகளின் கடமையாக அமையவேண்டும்" என்பது அடிகளாரின் ஆசை.

"மக்களுக்காகச் சேவை செய்வதற்காக மீண்டும் மீண்டும் பிறவி எடுப்பதையே நான் வேண்டுவேன்" என அடிகளார் மேடைகளில் கூறுவதுண்டு.

பழமையிற் காலூன்றிக் காலத்துக்கேற்ற முறையில் சைவத்தையும் தமிழையும் பேணிவளர்த்துவரும் அடிகளாரை 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் வரவேற்கும்

பணியில் பேரன்பர்களுடன் அடியேனும் பங்குகொண்டிருந்தேன். இதனை வாழ்க்கையில் ஒரு பெரும் பயன் எனக்கருதி அகமகிழ்கின்றேன்.

"இன்பத்தமிழையும் இறையருள் நெறியையும் நினைக்கின்ற பொழுதெல்லாம் இலங்கையை நினைக்காமலிருக்க முடியாது. சைவத் தமிழ்த் தொண்டனாகவாழவேண்டும் என்று விரும்பிய நம்மை இலங்கைத் தமிழ் அன்பர்கள் வண்ணப் பணித்து வருக வென்று வான் கருணை காட்டினார்கள். .........செந்தமிழும் சிவநெறியும் கண்ணெனப் போற்றி வளர்க்கின்ற அந்நாட்டு மக்கட்கு என்றும் ஓர் எளிய தொண்டன் என்பதை மிக மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்கின்றோம்'' என ஈழ நாட்டு மக்களுக்கு அன்று கூறினார்கள்.

இன்றும் அடிகளார் அவ்வாறே ஒரு தொண்டனாக விளங்கி வருகின்றார்கள். அகில இலங்கை காந்தி சேவா சங்கத்து அன்பர்களின் அழைப்பை அவ்வப்போது ஏற்று ஈழ மணித்திரு நாட்டுக்கு வருகை புரிந்து செந்தமிழையும், சிவநெறியையும் வளமாக்கப் பேருதவி புரிந்து வருகின்றார்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதையும் மக்களுக்கு அழகாக எடுத்துரைத்தும் வருகின்றார்கள்.

சமீபத்தில் அடிகளார் அவர்கள் இலங்கையின் பல பாகங்களுக்கும் மின்வேகத்திற் சென்று இனிய பல சொற்பொழிவுகளை ஆற்றித் திருமுறையின் சிறப்புகளை எல்லாம் மக்களின் உள்ளங்களில் பதிய வைத்தார்கள்.

தவத்திரு அடிகளாரின் நாவிலிருந்து உதிர்ந்தகருத்துக்களைத் திரட்டி நூல் வடிவில் தந்துள்ளார் எங்கள் அன்பர் ஈழத்துச் சிவானந்தன். செந்தமிழ்ப் பற்றும் இறைபக்தியும் நிறைந்த இளைஞர் சிவானந்தனுக்குத் தமிழ் மக்களின் நன்றி உரியது.

ஈழத்துச் சிவானந்தன் தமிழ் கூறும் நல் உலகத்துச் சிவானந்தனாக விளங்க வேண்டுமென்பதே எமது பிரார்த்தனையாகும்.

தமிழ் வாழ்க!

'கலாநிதி'
சாவகச்சேரி
இலங்கை, 8-4-68

இராஜ. அரியரத்தினம்

# மாத்தளையில்

ஆன்மாக்களுக்கு ஆசையதிகம். மனிதர்களுக்கிருக்கும் ஆசையை அளவிட்டு உரைக்கவியலாது. ஆசையை அழித்து விடுதல் என்பதில் நமக்கு நம்பிக்கையில்லை. எந்த மனிதனுக்கும் ஏதாவதொன்றிலே ஆசையிருக்கத்தான் செய்யும். எல்லாச் செல்வங்களையுமேற்று-உண்டு- உடுத்து-உறங்கி வாழ விரும்புகின்றனர் சிலர்; செல்வாக்குப் பெருக்கால் சிறந்த பதவிகளைப் பெற்று வாழ ஆவல் கொள்கின்றனர் சிலர்; நாட்டை ஆளும் பேற்றினைப் பெற்று தனிசிறந்த தலைவர்களாக வாழ விரும்புகின்றனர் பலர். இவ்வாறு ஒவ்வொரு வகையான ஆசைகளுடன் மனித இனம் அலைந்து கொண்டிருக்கிறது.

நாமுங்கூட நல்ல அருள்நெறி வாழ்வு வாழ்ந்து அறச் செல்வர்களாகத் திகழ்பவர்களைக் காண ஆசைப்படுகின்றோம். ஆசையைப் பொறுத்தமட்டில் நாம் கைக்கொள்ள வேண்டியது ஒன்றேயொன்று-அதுதான் எல்லை. எதற்கும் ஒரு வேலி-எல்லை-வரையறை தேவைப்படுவது போலவே ஆசைக்கும் ஓர் எல்லை-வரையறை அவசியம் வேண்டும். மனிதனின் ஆசையுணர்வு அளவுக்கு அதிகமாக-எல்லை கடந்து செல்கிறபோது ஆபத்து நேருகின்றது. ஒரு வரையறையுடன் எந்த உயிருக்கும் இன்னலற்றமுறையில்-நன்மை பயக்கும் வகையில் ஆசை உருவெடுத்தால் அது போற்றப்பட வேண்டியதே.

மனிதனைக் குரங்குக்கு ஒப்பிடுவார்கள். இப்போதைய மனிதர்களில் சிலரைக் குரங்கோடு ஒப்பிடவும் முடிவதில்லை. இப்போதையச் சில மனிதர்களை விட குரங்கு எவ்வளவோ உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறதெனலாம். குரங்கினது இயல்பு வெள்ளிடைமலை. கொம்பு விட்டுக் கொம்பு தாவுவது அதன் இயல்பான செயல். அஃது ஒரு கொம்பை விட்டு மறு கொம்புக்குத் தாவும்போது முன்பு பிடித்த கொம்பை விட்டு விட்டுத்தான் தாவுகிறது. ஆனால், அளவு கடந்த ஆசை

வழிப்பட்ட மனிதனே ஒன்றை விட்டு ஒன்றைப் பற்ற முயல்வ தில்லை. எல்லாவற்றையும் ஒருசேரப் பற்றி நிற்க விரும்பு கின்றான். இந்த எல்லை கடந்த-வரம்பு மீறிய ஆசைப்பெருக் கினாலேதான் அவன் பல அல்லல்களுக்குள்ளாக வேண்டியிருக் கிறது.

அருமையான ஓர் ஆங்கிலக் கதையுண்டு:-பொன்னிலே ஆசை கொண்டவன், தான் தொட்டதெல்லாம் பொன்னாக விரும்பி இறைவனிடத்திலே வரம் வேண்டித் தவமிருந்தான். துன்பங்கள் பலவற்றைத் தாங்கித் தவமிருந்ததால் இறைவன் எழுந்தருளினார். ''என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்ட ருளினார். ''யான் தொட்டதெல்லாம் பொன்னாக அருள் பாலிக்க வேண்டும்'' என்று பக்தியுடன் விண்ணப்பம் செய் தான். இறைவன் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றி மறைந்தருளினார்.

வரம்பெற்ற நேரம் தொடங்கி வகை வகையான பொருட் களைத் தொட்டுத் தொட்டு அவைகளைப் பொன்னாக்கினான். பொன்குவியல் நிறைய நிறைய அவனது பூரிப்பு அளவு கடந்து அவனது உடலையே பூரிக்க வைத்தது. மகிழ்ச்சிப் பெருக்கு அவனைப் புது மனிதனாக்கியது. பசியெடுத்தது. உணவுக்குப் பக்கத்திலே போய் உணவைத் தொட்டான். அவ்வுணவும் பொன்னாகியது-பசி அவனை வாட்டி வதைக்கக் கவலை தலை காட்டியது. சாப்பிட முடியாத நிலை வந்துவிட்டதை எண்ணி எண்ணி ஏங்கினான். இந்த வருத்தத்தோடு வேறொரு பெரு வருத்தமும் காத்திருந்தது. பக்கத்தில் நின்ற தன் பிள்ளையை யும் தொட்டான். அதுவும் பொன்னாகியது. ஆசைவெறியால் ஆண்டவனிடம் கேட்டுப் பெற்ற வரம், வயிற்றுக்குள் சோற் றையே அனுப்ப முடியாமற் செய்து விட்டதை நினைத்து ''ஆண்டவனே! வயிற்றுக்குணவு கிடைத்தாலே போது மானது'' என அரற்றினான். ஆகவே ஆசைக்குக் கட்டுப்பாடு தேவை.

ஆசையை ஒழித்துவிடு என்பதைக் காட்டிலும் ஆசைக்கு எல்லை வகுத்துக் கொள் என்பது சாலச் சிறந்தது. ஏனெனில் ஆசை மனிதனைப் பொறுத்தமட்டில் ஒழிக்க முடியாதவொன்று. ஒரு சில நன்மைக்காக ஒரு சிலர் ஆசையுணர்வுக்குத் தடை விதிக்கலாம். பொதுப்படையாகச் சமுதாய வாழ்வில் ஆசையை அழிக்க முயல்வது முடியாத காரியம்-வரையறை செய்து

கொண்டு வாழ்தலே இயலும்.

அன்பை-அறத்தைப் பேணி வாழ நாம் ஆசைப்பட வேண்டும். அறஞ்செய்வதற்காகவே வாழ்கிறோம் என்ற நினைப்போடு-அறமற்றவைகளை அறவே தள்ளி இன்பத் தமிழ் நாட்டினுடைய இணையற்ற பண்பினைக் காக்க ஆசை கொள்ள வேண்டும்.

'அறத்தால் வருவதே இன்பம்.' என்ற கோட்பாட்டுக்குத் தலை சாய்த்து வாழ்ந்ததனாலேதான் பழந்தமிழகம் பாரில் உயர்ந்து பண்பு வழிச் சிறந்திருந்தது. அகத்திலே அன்பை வளர்க்கவும் அறத்தைப் பேணவும் சமயச் சார்புடைய வாழ்வு தேவை. மனித வாழ்வுக்கு ஒரு கொள்கை-ஓர் ஒழுங்கு வேண்டும். அத்தேவைகளைச் சமயவாழ்வினாலே பெறமுடியும். ஒரு மனிதனுக்கு நல்ல கொள்கைப் பற்றும், ஒழுக்கமும் வாய்த்தவுடன் பிறர் நலம் பேணுகின்ற மனப்பண்பு உண்டாகும்; அந்த மனப்பண்பு பிறர்க்குத் துன்பம் கொடுக்காமல் வாழ்வதோடு-பிறர் தருந் துன்பத்தைப் பொறுக்கும் பெற்றியையும் நல்குகின்றது.

(தமிழரின் சமயப்பண்பு தன்னிகரில்லாதது; தலையாயது. அது பாவம் செய்யாதே என்று போதிக்காமல் பாவம் செய்ய நினைக்காதே என்கிறது. அது போலவே கொலை செய்ய நினைக்காதே — திருட நினைக்காதே—என்கிறது. கொலை செய்தால்-திருடினால் பாவம் என்று சொல்லாமல், அவற்றை மனத்தில் நினைத்தாலே பாவம் என்று கூறுகிறது. இதிலிருந்து தமிழருடைய சமயநெறி சமுதாயத்தில் அன்பையும் அறத்தையும் உருவாக்க உழைத்திருக்கிறதென்பது புலனாகிறது) ஆன்மீக ஈடேற்றத்துக்குத் தமிழர் சமயம் தலைசிறந்த வழிகளைக் காட்டியிருக்கிறது. வழி வகைகளைக் காட்டியதோடமையாது, அவ்வழிப்பட்டு வாழ்ந்து வளமான நிலையையும் பெற்றிருக்கிறது. புறவாழ்வின் சிறப்புக்கு அகவாழ்வின் துணை இன்றியமையாததென்பதை உணர்ந்து உணர்த்திய சமயம் தமிழர் சமயம். அகப்புரட்சியின் பயனாகவே புறவாழ்வைத் தூய்மையுடையதாக ஆக்க முடியுமென்று எண்ணிச் செயல்பட்ட பண்பு பாராட்டி மகிழ்தற்குரியது.

சில வீடுகளிலே வெளிச்சுவர்களுக்கு வெள்ளையடித்து உட்சுவர்களைப் புறக்கணிக்கிறார்கள். வெளிச்சுவர், பார்ப்பவர்களின் பார்வையை ஈர்க்குமேயொழிய அவ்வீட்டில் வாழ்பவர்

களுக்குப் பயன் தராது. உட்சுவர் தூய்மையற்று இருந்தால் வீட்டிலுள்ளவர்களின் நல்வாழ்வு பாழ்பட்டுப்போகும். ஆகவே உட்சுவரின் தூய்மையைக் கவனித்த பின்பே வெளிச்சுவரைத் தூய்மையாக்க முனைய வேண்டும். மனித வாழ்விலுங்கூட அகவாழ்வைப் பற்றிய சிந்தனைக்குப் பின்பே புறவாழ்வைப் பற்றிய எண்ணம் எழவேண்டும். அதுவே மனித மரபு-தமிழ் மரபு. புறப் புரட்சியின் வெற்றிக்கு அகப்புரட்சி துணை செய்யும். மணிவாசகர் போன்ற அனுபூதிமான்கள் அகத் துறைப் புரட்சியையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து உயர்ந்தார்கள்.

எனவே, ஆசைக்கு வரையறை வகுத்து, அன்பும், அறனும் கொண்ட வாழ்வு வாழ்ந்து, புறவாழ்வின் தூய்மைக்கு இன்றியமையாத அகவாழ்வை-ஆன்மீக வாழ்வைத் தூய்மை யாக்கித் துன்பம் கண்டவிடத்துத் துடித்து-உடுக்கை இழந்த வன் கைபோல விரைந்து வேண்டியது செய்து என்றும் எல்லா உயிர்களிடத்தும் பற்று வைத்து வாழ வாழ்த்தி விடை பெறுகின்றோம். வணக்கம்.

# நாவலப்பிட்டியில்

அன்புக்கும் பாராட்டுக்குமுரிய அவைத் தலைவரவர்களே! அறிஞர் பெரு மக்களே! பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே! நடமாடுந் தெய்வங்கள் கோவில் கொண்டிருக்கும் இந் நாவலப்பிட்டியிலே படமாடுந் தெய்வத்திற்கான திருமுறை விழாவிலே கலந்து கொள்ள நேர்ந்தமைக்குப் பெருமகிழ்வும் பூரிப்பும் அடைகிறேம். வரலாற்று வழியிலே கண்ணேட்டத்தைச் செலுத்துகின்றபோது, காலத்தால்—கருத்தால்--நாகரிக முதிர்ச்சியால் மூத்த பழமையுடைய இனமாக மிளிர்கிறது நமது தமிழினம். அத்தகைய இனத்தின் தனிச்சொத்துக்களாக, உலக இனங்களின் நலனில் நாட்டம் கொண்ட தத்துவங்களாக ஒளிர்கின்றன திருமுறைகள். திருமுறைகளைப் பயில்வதனுலே சமய அறிவு பெருவதோடு, காலப்போக்கில் சமய உணர்வை--அனுபவத்தை நாம் பெறுகிறேம்; வாழ்க்கையில் இன்பத்தை அடைய அவாவுறும் நாம் திருமுறை நெறிகளால் பேரின்பப் பேற்றினையும் அடைகின்றேம். கடவுளை எங்கோ தூரத்தில் வைத்து வணங்கிய நிலைமாறி மிகமிக அண்மையில் எம்பிரானை அழைக்க.-காண-வாழ்த்த-வணங்கத் திருமுறைகள் வாய்ப்பளிக்கின்றன.

(திருமுறைக் கடலிலே ஆழக் குளிக்கின்ற போது, சமுதாய நன்மைக்காக-மனித இன மேம்பாட்டிற்காகப் பாடுபட்டுழைக்க வெண்டுமென்ற வேட்கையுண்டாகின்றது. நாடு உய்யவந்த நாவுக்கரசரது திருவார் தேவாரத் திருப்பதிகங்களினுலே தீதற்ற திறமையும் திண்மையும் நிரம்பி, உள்ள உறுதியையும், பிறர்க்காகஉழைத்துப் பேரின்பமடையும் மனேபாவத்தையும் பெறமுடிகிறது.) மனிதகுல வாழ்வுக்கும் வளத்துக்கும் அயராது சிந்தித்த சிந்தனைச் செம்மல்களில்-பேராசிரியர்களில் அப்பரடிகளும் ஒருவர். (நமது கருத்துப்படி அப்பரடிகள் தொண்ணூறு விழுக்காடு சமுதாய மலர்ச்சிக்காகப்

பாடுபட்டிருக்கிறார்.

தமிழ்ச் சமூகத்தின் மொழிவழி நாகரிகத்தையும் அவர் பேணிக்காக்கப் பெருந் தொண்டாற்றியமை மறக்க முடியாதது. சமணத்தின் நுழைவினால் சைவசமயமும் தமிழும் குன்றிக் குற்றுயிராகிக் காலப்போக்கில் மறைந்தொழிய ஏதுவாகு மெனக் கருதியே, சமணர்களால் உண்டான இன்னல்களை எல்லாம் எதிர்த்துப் போராடினார்; இசையைத் துய்க்கத் தெரியாத-அனுபவிக்கத் தெரியாத அன்றையச் சமணர்கள், மலரை மணக்காதே என்பது போல் இசையைப் பொழியாதே என்பதுபோல் இசையைச் சுவைக்காதே! எனத்தடை போட்டார்கள். தடைவரினும் படைவரினும் தளராது தன்னம்பிக்கையால் - உளவலிமையால் இன்னிசை பொழிந்து இசைத் தமிழ் வளர்த்தார் அப்பரடிகள்.

பிறர் நலம் பேணுகின்ற உள்ளத்தினரான அப்பரடிகள் அல்லும் பகலும் அறவாழி அந்தணன் தாளை இறைஞ்சி இறைஞ்சி அவனது ஆன்மாக்களிடத்து அன்பு காட்டி அரும்பாடுபட்டார்.

> ''தொண்டலாது உயிர்க்கு ஊதியமில்லை''
> ''என்கடன் பணி செய்து கிடப்பதே!''

என்பன போன்ற வரிகள் அப்பரடிகளின் தொண்டுள்ளத்தைத் தெளிவாக்கி நிற்பன. திருமுறைப் பாசுரங்களிலே என்னைப் பிணித்து உருக வைத்தவை மணிவாசகரின் திருவாசக மழையும், திருநாவுக்கரசரது தேவாரத் திருவமுதமழையுமேயாம். நாள்தோறும் நேரங்கிடைக்கின்ற போதெல்லாம் அப்பருடன் அருண்மணி வாசகருடன், பொழுதைப் போக்குவதில் பேரின்பமடைகின்றேன்.

பலர் இறைவனைக் காட்சிப் பொருளாக - கோயிற் பொருளாக-கற்பனைப் பொருளாகக் காண்கின்றார். ஆனால் திருமுறைச் செல்வர்களோ கருத்துப் பொருளாக-அனுபவப் பொருளாக-வாழ்வுப்பொருளாகக் கண்டார்கள். நமக்கும் அப்படியே காட்டுகின்றார்கள். புலன்வழித் தொண்டினால் கடவுள்நெறிகாட்டிப் பொறிவழித் தொண்டினால் மக்கள் சேவையின் மாண்பினை உணர வைத்திருக்கிறார்கள். நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தரின் திந்தமிழ்க் கவிகள் கருத்தை கரைய வைத்துச் சமயச்சார்புடைய சிந்தனைக்கு வித்திடுகின்றன;

ஆளுடையப் பிள்ளை அருளிய எளிய இனிய தமிழ் பனுவல்கள் அருள் வாழ்வுக்கு நம்மை யாற்றுப் படுத்துகின்றன. குறிக் கோளில்லாது கெட்டொழியும் நமக்கு நல்லதொரு கொள்கைப் பற்றை-இலட்சியத்தை-குறிக்கோளைத் திருமுறைகள் கொடுக்கின்றன; (தமிழ் நெடுங்கணக்கிலேயுள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டினைப் போல் பழமைவாய்ந்த நீண்ட சமயவரலாற்றிலே பன்னிருதிருமுறைகளும் உயிர்போன்றவைகளாகத் திகழ்கின்றன).

துன்பங்களை இன்பங்கள் எனக்கருதும் அறியாமையினால் மனிதன் அல்லலுறுகின்றான்; வீதியிலே நடக்கின்றான்; ஏதோ சில எண்ணங்களினால் தன்னையும் தான் நடந்து செல்கின்ற சாலையையுமே மறக்கின்றான்; வழி பார்த்து நடக்காமையினால் கல்லில் மோதுகின்றான்; காலில் புண்ணுண்டாகி விடுகின்றது "காலில் என்ன கட்டுப் போட்டிருக்கிறாயே!" என்று யாராவது கேட்டால் "கல் இடித்துவிட்டது" என்று கூறித்தன் குற்றத்தைக் கல்லின் மேல் சுமத்திவிடுகின்றான். அதுபோலத் தான் உயிர்கள் அறியாமையினாலே பலப்பல அல்லல்களுக்கு ஆளாகின்றன.

நங்கை ஒருத்தி ஆமைக்கறி சமைக்கிறாள். அடுப்பிலே தீ மூட்டி ஆமை போட்ட உலையை ஏற்றுகிறாள்! சற்றுச் சூடானதும் ஆமையைப் பக்குவப்படுத்த எண்ணுகின்றாள். உலையிலே சிறுசூடு ஏறியதும் உள்ளிருந்த ஆமையின் உள்ளம் இன்பம் அடைகின்றது. சதா காலமும் குளிர்நீரிலே வாழ்ந்த ஆமைக்கு இளஞ்சூடு இதங்கொடுக்கின்றது - இன்பமளிக்கிறது. உலைப் பானைக்குள் மகிழ்ந்து ஓடியாடித் திளைக்கிறது. அறியாமையின் கொடுமையை அந்த ஆமை சிறிது நேரத்தில் அனுபவிக்கத் தான் போகிறது. இளஞ்சூடு கடுஞ்சூடானதும் இந்த உலகத்தையே இழக்க போகிறோமே என்று உணரும் ஆற்றல் அதற்கு அப்பொழுது இல்லை. காரணம்? அந்த ஆமையின் அறியாமையே! அது போலவேதான் உயிரினங்கள் அனைத்தின் உள்ளமும் உணர்வும் இருக்கின்றன.

வாழ்க்கை என்ற அடுப்பு - அனுபவம் என்ற பானை - ஆர்வம் என்ற தண்ணீர்; உயிராகிய ஆமை; ஆசையென்ற தீ எரிகிறது. உலகியல் இன்பமாகிய இளஞ்சூடு உயிரை இதப்படுத்துகிறது. பாவம்! அறிவிலே தெளிவில்லாததால் உயிர் அல்லற்படுகிறது. இத்துன்பத்தினின்று நீங்கி எல்லை

யில்லா இன்பம் பெற உதவும் சமயக் கோட்பாட்டின் தலையாய தொகுப்பே திருமுறைகள்.

திருமுறைகளிலுள்ள பாடல்கள் தெய்வமணங்கமழும் செய்யுட்களாகவும், தீந்தமிழ் சுவை சொட்டும் தெய்விகக் கனிகளாகவும் திகழ்கின்றன. பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய நமது நாயன்மார்களின் பாடல்கள், பரமன்பதம் நாடுவதற்கும், பரமன் விரும்பும் செயல்களைச் செய்வதற்கும் தூண்டுகோல்களாய்த் தோன்றுகின்றன. நாளுக்கு நாள் நாழிகைக்கு நாழிகை-அவகாசங் கிடைக்கும் போதெல்லாம் திருமுறைகளைப் படித்து அனுபவித்தால் இனிய பரிபூரண ஆனந்தத்தில் திளைக்க முடியும் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. நெஞ்சைத்திறந்து நேசத்தைப் பெருக்கி அகத்தில் ஊற்றெடுக்கும் அன்பினை வெளிக் கொணர்ந்து அறமானவைகளைச் செய்து அருட்செல்வர்களாக வாழவைப்பவை திருமுறைகள். இறையருளால் இன்னல் களைந்து இன்பமடைந்து இறும்பூதடையச் செய்வதோடு சிவனைப் பற்றியும் சிவனருள் ஆர்ந்த செல்வர்களைப் பற்றியும் - சிவத்தலங்களைப்பற்றியும் தெளியத் திருமுறைகள் உதவுகின்றன.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் சைவப் பெருமக்களுக்கு வாய்த்த தெய்வத்தமிழ் வேதமாகும். இறைவன் எல்லா உலகத்திலும் இருப்பவன்; அவனுக்குத் தென்னாட்டிலே அருமையான செல்லப் பெயருண்டு. அதுதான் சிவன் என்பது. ''தென்னாடுடைய சிவனே போற்றி; எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி'' என்கின்றார் மணிவாசகர். தென்னாட்டிலே சிவனைக் கருதப் படுகின்ற நமது கடவுள் நாம் வாழ நமக்கு இடையூறாய் இருப்பவைகளைத் தானே எடுத்துக்கொண்டார். இதிலிருந்து இறைவனின் தாய்மை நிலையை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். பாம்பும் புலித்தோலும் பார்க்குமிடத்து எவர்க்கும் தேவையற்றவை. அவற்றினை அவரே எடுத்துக் கொண்டார். குழந்தையின் நன்மையையும் வளர்ச்சியையும் குறிக்கொண்டு காக்கும் ஓர் உத்தமமான தாய் பத்தியமாக இருப்பது போலவே ஆன்மாக்களைப் பொறுத்தவரை அண்ட சராசரம் அனைத்தையும் ஈன்றி புறந்தரும் அன்னையாக ஆண்டவன் இருக்கின்றான். ''தாயிற் சிறந்த தயாவான தத்துவனாகவும்'

"பால்நினைந்தூட்டுந் தாயினுஞ்சாலப் பரிவுடையனாகவும்" இருப்பதை அனுபவத்திலே கண்டு மணிவாசகர் பாடியருளினர்.

இத்தகைய இறையின் இயல்புகளைத் தெளிவாக்கி உலகுக்கு ஒளிபரப்ப எழுந்த சாதனங்களே திருமுறைகள். ஐம்புல வேடர்களின் இயல்புகளைக் குறைத்து-மறைத்து மாண்பார் நிலைக்கு மாந்தரை உயர்த்த உதவுவன நமது சைவத்திரு முறைகள் என்று அழுத்தமாகக் கூறி வாழ்த்தி விடை பெற ஆசைப்படுகின்றோம்.

# நாவலப்பிட்டியில்-2

அடியார்கள் பலர் வாழ்ந்தார்கள். அற்புதங்கள் பல புரிந்தார்கள். வேதம் பாடும் இறைவனை இன்தமிழ்ப்பாக்களால் ஏவல் கொண்டார்கள். இதயங்கலந்த உறவும் இன்னிசைப் பொழிந்த மெய்யடியார்களின்மேன்மைக்கு உதவி புரிந்தன. சைவ நன்மக்களின் வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல் ஏனைய இனத்தவர்க்கும், மதத்தவர்க்கும் நமது அடியார்கள் பயன்பட்டிருக்கிறார்கள். அவர்களது சிந்தனை ஆழியினின்றும் எடுக்கப்பெற்ற தத்துவமுத்துக்கள், நம்மை வாழவைப்பதுடன் வாழ்க்கை இன்னதுதான் என்று காட்டியும் நிற்கின்றன.

நமதுநாயன்மார் வரலாற்றில் சுந்தரர் வரலாறு நாம் அறிந்திருக்கவேண்டிய ஒன்றாகும். இல்லறத்தில் வாழ்ந்து-இன்னல்களுக்கு இலக்காகி இறைவனடி சேர்ந்த வரலாறு; அதுதமிழர்களின் கருத்துடன் கலந்து நிற்கத்தக்கது. துன்பத்தின் போது சோர்ந்து வாழ்க்கையில் விரக்திகொள்பவர்களைத் தட்டியெழுப்பி, வாழ்க்கையில் பிடிப்பை உண்டாக்கவல்லது சுந்தரர் வரலாறு.

சுந்தரர் வாழ்க்கைக்கடலில் ஆழக்குளித்து முத்தெடுத்தவர். அவரது காலம் கருத்துக்காலம் - கருத்தாளரை மதித்து நடந்த நாகரிகக்காலம். வழிவழியாக அந்த விழுமிய நாகரிகம் காப்பாற்றப்படாதது வருத்தத்தைத் தருகிறது. ஈன்று புறந்தருதலில் நம் தலைவர்கள் பின் நிற்கவில்லை. நாம்தான் பேணிக்காக்கத் தவறிவிட்டோம். தவற்றினை உணர்ந்து தக்கப்படி செயல்பட்டால் இனியாவது நல்லகாலம் பிறக்கலாம். வையத்துள் வாழ்வாங்கு வாழ வள்ளுவர் தந்த கருத்தினை நல்லபடி நடைமுறைக்குக் கொண்டுவர நாம் இன்னும் அதிக கவனம் எடுக்கவில்லை.

நம்மிடையே இருக்கும் கருத்துக்களைப்பற்றிச் சிந்திக்காமல் இறக்குமதிக் கருத்துக்களில் எண்ணத்தைத் திருப்பி

விட்டிருக்கிறோம். வீட்டுத் தோட்டத்திலே கத்தரிக்காய் காய்த்துக் குலுங்கிக் கிடப்பதைக் கவனியாது—சந்தைக்குப் போகும் நிலைமைக்கு நாம் வந்திருக்கிறோம். சுந்தரர் காலம் வீட்டிலே காய்த்த கத்தரிக்காயைச் சமைத்துண்டகாலம். விரிந்த மனப்பான்மையோடு மற்றையோர் கருத்துக்களைப் பாராட்டி நம் கருத்தை வளர்க்க நாம் முனையவேண்டும். நம்நாட்டு நயத்தக்க நாகரிகத்தின் சிறப்பினுக்கு, நமது கருத்துக்கள் பரவிய முறையினை எடுத்துக்காட்டலாம். மற்றைய நாடுகள் இரத்தம் சிந்தியே கருத்துக்களை வளர்த்தன—பரப்பின. தென்னாட்டிலே அப்படியில்லை. கருத்து வழிப் போராட்டம் அதிகம் இருந்ததுபோலவே கனிவும் அவற்றுடன் இழையோடிருந்தது.

புத்திக் கூர்மையும், தூய நோக்கமும் கொண்டவர்களது ஊக்கத்தினாலேயே புரட்சிகள் உண்டாகின்றன. கருத்து வழிப் புரட்சிக்கு நமது சமயக் குரவர்கள் பலகாலமும் முயன்றிருக்கிறார்கள். மணிவாசகர் இறைவனைக் காதலியாகவும் தன்னைக் காதலனாகவும் உருவகப்படுத்திக் கருத்துப் புரட்சி செய்தார். இப்படியே, ஆண்டவனை அப்பனாக, அம்மையாக, மாமனாக, மாமியாக, உருவகித்துப் புரட்சி செய்திருக்கிறார்கள். நமது சுந்தரரின் நிலை தனியானது. அவர் இறைவனைத் தோழனாக்கினார். மனம் விட்டுப்பேச நண்பன் தேவை. எல்லா நண்பர்களிடத்தும் மனம் விட்டுப் பேசுதல் என்பது முடியாத காரியம். சிலர் புறத்தால்-முகத்தால் நண்பர்களாகவும், அகத்தால் பகைவர்களாகவுமே இருப்பார்கள். எவருக்கும் உயிர்க்குயிராக ஒரு நண்பன்தான் இருப்பான். இந்த விதிக்கு விலக்காக ஒருசிலர் இருக்கலாம்; ஆனால் எல்லாரும் இருக்க இயலாது; இருக்கவும் முடியாது. வாழ்க்கை அனுபவத்தில் உண்டாகும் அந்தரங்கங்களையும் அவலங்களையும் மனம்விட்டு உயிர்த் தோழனிடம் நாம் சொல்லுவது போலவே, சுந்தரர் இறைவனைத் தன் உயிர் தோழனாக்கித் தன் இன்னல்களை மனம்விட்டுச் சொன்னார்.

தோழமைக்கு இந்த இருபதாம் நூற்றாண்டில் அதிக சக்தி உண்டு. மேடையிலே நின்று அவையைப்பார்த்து, அன்பர்களே! பெரியோர்களே! என்றோ சகோதர சகோதரிகளே! என்றோ, சீமான்களே! என்றோ செல்வர்களே! விளித்தால் அவ்வளவு வரவேற்புக் கிடைப்பதில்லை. தோழர்களே!

என்றவுடன் கட்டுக்கடங்காத மகிழ்ச்சி ஆரவாரத்தையும் கையொலியையும் காணமுடிகிறது. இத்தகைய சக்திவாய்ந்த தோழமை சுந்தரர் காலத்திலேயே, அதுவும் ஆண்டவனிடத்திலேயே உண்டாகிய தொன்றாகும்.

சுந்தரர் உள்ளத்தால் ஞானி; உடலால் உலகியலார். சுந்தரரின் வாழ்க்கை நகைச்சுவை நிரம்பியது. இரண்டு மனைவியரை மணந்தார். ஆற்றில் போட்டுக் குளத்தில் எடுத்தார். கலப்புத் திருமணம் செய்து சமுதாய வேறுபாடுகளை ஒழித்தார். ஒருவனிடத்தில் மட்டுமே கடன்பட்டார். அதுவும் தன் தோழனான ஆண்டவனிடத்திலேயே தேவைகளை வேண்டிப்பெற்றார். இப்படிப் பலப்பல உண்டு.

"தம்பிரான் தோழன்" என்ற பெருமையும் பெருநலமும் எய்திச் சைவப் பெருமக்கள்வாழ வழிகண்டார் சுந்தரர். மாழை ஒண்கண் பரவையாரைத் திருவாரூரில் மணந்தார். குண்டையூர்கிழார் அன்பின் வேண்டுகோளால் ஊர் நிறைந்த நெல்லைத் தந்தவனைக் கொண்டே திருவாரூரில் தருவித்தார். இங்கு இறைவனை ஏவல்கொண்ட தன்மையை நினைக்குந்தோறும் "ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே!" என்ற அடியை எண்ணுந்தோறும் உள்ளம் உருகுகின்றது. செங்கல்லைச் செழும் பொன்னாக்கினார். அருள் நெறியை மறந்து, ஆன்ம ஆக்கத்தைத் துறந்து பொருள் நெறிப் போரில் போய்க்கொண்டிருக்கும் நமக்கு இச்செய்திகள் வியப்பைத்தான் தரும். ஆனால் சுந்தரரது அருட்பாக்களை - அவர் சிவனை வேண்டிப் பாடும் கசிவை உணர்ந்தோமானால் அவரது பாசுரங்களுக்கு மிகப்பெரு வலிமை இருந்தது- இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வோம்.

திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து "பிரியேன்" என்று சத்தியம் செய்தார். ஆயினும் திருவாரூர் இறைவனிடம் காதல் மீதூர அச்சத்தியத்தை மறந்தார். ஆம்! மன்றுளாடியைப் பாடவேண்டி மறந்தார். ஊர் எல்லை தாண்டியதும் கண்களை இழந்தார். இங்கேதான் சுந்தரரின் செந்தமிழ் உச்சநிலையை அடைகிறது. "மூன்று கண்ணுடையாய் என்கண் கொள்வது நீதியோ?" என்று கேட்டார், "மகத்திற் புக்கதோர் சனியெனக்கானாய்" என்று ஏசினார், "வாழ்ந்தும் போதீரே" என்று திட்டினார். இறைவன் கண் கொடுக்காமல் இருக்கமுடியுமா?

வுடலுற்ற பரவையார்பால் மூவருமறியாமுக் கண்ணைத் தூதுவிட்டார். இதனால் கலிக்காமரின் பகையைப் பெற்றார். இறைவனால் சந்து செய்து வைக்கப்பட்டார். திருப்புக் கொளியூர் அவிநாசியிடம் முடியாத ஒன்றை முடிப்பித்தார்- முதலை உண்ட பாலனை அழைப்பித்தார். அரன் அடிசேர்ந் தார் பிறர் போன்றாரல்லர். இவ்வுடலுடனேயே வெள்ளை யானையில் வேண்டிய நண்பர் உடன்வர வெள்ளியங்கிரியை அடைந்தார்.

சுந்தரர் பெருமையைச் சொல்லமுடியாது. இறைவனின் திருவாயால் ''மேருவரையின் மேம்பட்ட தவத்தான்'' என்று புகழப்பட்டார். கல்வியில் மேம்பட்ட சுந்தரர் எல்லாவற் றுள்ளும் இனிய கடவுளை ''கற்ற கல்வியினும் இனியான்'' என்றும், ''பண்ணிடைத்தமிழ் ஒப்பாய்'' என்றும் வாழ்த்தினார். என்னே அவர் செந்தமிழ் ஆர்வம்! இவர் ஆராய்ச்சித் திறம் இக்கால வரலாற்று ஆராய்ச்சியாளரையும் பிரமிக்கச் செய்கின்றது.

சுந்தரரது காலம் சமயத்துக்கு மதிப்பளித்த நல்ல காலம். ஆனால் சமயத் தொண்டர்கள் நலிந்து வாடிய காலம். இன்றோ சமயத்தொண்டர்கள் நன்றாகத்தான் இருக்கிறோம். ஆனால் சமயத்துக்குத்தான் நல்லநிலை இல்லை. சூழ்நிலை இப்படி மாறியது வருந்தத்தக்கது. சூழலைமாற்ற-உருவாக்க மனிதனால் முடியும். ஆகவே, பொன்கேட்டு, பெண்கேட்டு, கண்கேட்ட சுந்தரரின் காலத்துச் சமயநிலையை உண்டாக்க நாம் உழைப்போம் என வேண்டி-வாழ்த்தி விடை பெறுகிறோம்.

# பதிலையில்

(இந்த உலகிலே எதையும் இழக்கலாம் - மறக்கலாம், ஆனால் தாய்மொழியை இழக்க இயலாது; மறக்க முடியாது. தன் சொந்த மொழியை இழந்து மறந்து பிறமொழிப் பற்றுக் கொண்டு வாழ்தல் பொய்க்காலில் நடப்பதற்குச் சமமாகும்) எந்த இனமும் தத்தம் மொழியைப் பேச - பேண முன்வருவது போலவே தமிழர்களாகிய நாமும் முன் வர வேண்டும். தமிழ் உணர்வுகொண்டு, தமிழ்ச்சிந்தனையால் தமிழ் நாகரிகம் காக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும், எல்லாக் கட்டத்திலும் தமிழ் வாழ்வு வாழ விருப்பங்கொள்ளவேண்டும். அப்பொழுது தான் தமிழ்வழி நல்லோர்களாய், தண்டமிழ்ச் சீரார்களாய்ச் சிறக்கமுடியும்.

தமிழையே பேச்சாகவும் மூச்சாகவும் கொண்டு வாழ்ந்த தனாலேதான் அன்றையத் தமிழின் தகைமை சான்ற தன்னிக ரில்லாத வாழ்வு வாழ முடிந்தது. தமிழ், வாழவும் வாழ வைக்கவும் போதிக்கும் ஒரு செம்மொழி. உறவாடி மகிழவே மொழி உதவுகிறது. உணர்ச்சிகளை வாயாலே காட்டுவதுடன் கண்ணாலும் முகத்தாலும் காட்டிவிடலாம். உணர்ச்சியைச் செம்மைப் படுத்தி உறவாட உதவும் கருவியாக நமது மொழி கருதப்பட்டது.

இன்றைய நிலையில் கலப்பு வந்துவிட்டது. சந்தேகமும் சலனமும் இக்கலப்பால் தலைகாட்டுகின்றன. இறைவனிடத் தில் உறவாடக்கூடக் குறிப்பிட்ட ஒரு மொழிதான் வேண்டு மென்று வலியுறுத்துபவர்களை இன்று காண்கிறோம். (எல்லாம் வல்ல - எல்லாம் அறிந்த எம்பெருமான் குறித்த ஒரு மொழி மட்டுமே தெரிந்தவராக இருக்கமாட்டார். தேவமொழியாக ஒரே மொழியை விரும்பி, அம்மொழிவழித் தொடர்புகளுக்குத் தான் செவிசாய்ப்பவராக இறைவன் இருப்பாரா?) சுரண்டலும் சுயநலமும் ஆதிக்கம் செலுத்திய காலத்தில், கடவுளின்

பெயரால் சிலர் செய்த கண்மூடித்தனமான பொய்ப் பிரச்சாரங்களில் இதுவும் ஒன்றாகி விட்டது. கடவுளை எங்கோ ஓரிடத்தில் வைத்து, எவரோ ஒருவரைத் துணைக்குக் கூப்பிட்டு, வழிபாடு நடத்தாத காலத்தில் குறிப்பான சில சடங்குகளும் குறித்த ஒரு மொழியும்தான் கடவுள் நெறி காண உதவும் என்ற கோட்பாடு வளரவில்லை. தமிழர், முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முதல்வனை வழுத்தினார்கள்; வாழ்த்தினார்கள். அந்த வாழ்த்துதலுக்கு இறைவனின் இசைவும் இருந்தது. அத்தகைய இசைவினை இப்போதும் பெறலாம், பெறவும் முடியும்.

நல்லவர்களை உருவாக்கும் பண்ணைகளான தேவாலயங்களில் தாய்மொழியில் வழிபாடு இன்றியமையாத ஒன்றாகும். இதயதாபங்களை அடக்கி-அழித்து இனிய நிலையை உருவாக்க, தாய்மொழியால், எந்தையும் தாயுமான மங்கைபங்கனைப் போற்றிப் புகழவேண்டும். ''வடமொழியும் தென் தமிழும் ஆயினான் கண்டாய்'' என்ற தத்துவம் இப்பொழுது நடைமுறையில் அதிகமாக இல்லாதது வருத்தத்தைத் தருகிறது. இறைவன் தமிழ் மொழியில் எவ்வளவு பற்று வைத்திருந்தான் என்பது வரலாற்று மூலமாகவே கண்டு மகிழக்கூடியதாய் இருக்கிறது.

வேதம் ஓதி விழிநீர் பெருக்குவதைப் போலவே திருமுறைகளை ஓதியும் விழிநீர் பெருக்கலாம். திருமுறைச் செல்வர்களில் ஒருவரான மணிவாசகப்பெருமான் ''நானே பொய்என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே'' என்று அரற்றி அழுது அருளார் அமுதம் பெற்றார். அழுவதற்கு உள்ளம் உருகவேண்டும்; உணர்ச்சி கசிய வேண்டும். அவைகளின் நெகிழ்ச்சிக்குத் தாய்மொழிதான் உதவும். எந்த மொழி வல்லுநரும் தன்னையொட்டிய சிந்தனையைத் தன் சொந்த மொழியிலே தான் சிந்திக்கிறான். அதைப் போல் நம்மைச் சார்ந்த வழிபாட்டுச் சிந்தனையும்-சிந்தனை வெளிப்பாடும் நமது தாய்மொழியிலிருந்தால் நலம் பயக்கும்.

தமிழருக்குச் சொந்தமான சில தகைமை இருப்பது போல, இறைவனிடத்தில் சொந்த மொழிவழித் தொடர்பும் இருக்க வேண்டும். இப்படிக் கூறுவதால் எம்மை வேற்று மொழி வெறுப்பாளர் என்று எண்ண வேண்டாம். மொழித்தொடர்

பினுல்-காலத்தால் மூத்த சமய குரவர்கள் சிறப்புற வாழ்ந்தது போல நாமும் வாழவேண்டுமென்ற விருப்பு நமக்கு உண்டாக வேண்டும். வேற்று மொழியை ஆத்ரித்து நமது மொழியைப் போற்ற வேண்டும். வடமொழியில் வேதம் என்பதை நாம் மறை என்று தமிழ் ஆக்குகிறோம். வேதம் என்பது வேய்தல் அதாவது மூடுதல் எனப்படும். ஆணவத்தை மூடிமறைக்க வேதங்கள் உதவுகின்றன. நமது தமிழ் மொழியில் முகிழ்த்த வேதமாகத் திருக்குறளைக் கருதுகிறோம். அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய உறுதிப்பொருள்களைத் தர எழுந்த வேதம் குறள். தமிழில் பெரும் பெரும் வேதங்கள் உருவாகி இருந்திருக்கலாம். ஆனல் கடல் கோள்களினுலும் பூகம்பங்களினுலும் அழிந்து மறைந்திருக்கலாம். இப்பொழுது நமக்கு உதவுவன திருமுறைச் செல்வங்களே. இச்செல்வங்கள் கூட மூடிமறைக்கப்பட்டிருந்தன. சிலர் தம் ஆதிக்க வாழ்வு ஆட்டங் கண்டு விடுமென்றஞ்சித் திருமுறைகளை மறைத்துப் பூட்டினர். சிதம்பரத்திலே மறைந்திருந்த திருமுறைகள் ஆண்டவனின் விண்ணெலியாற் பெறப்பட்டன. அவற்றை நம்பியாண்டார்நம்பி தெரிந்து தமிழுலகுக்கு அளித்தார். அத்திரு முறைகள் மறைக்கப்பட்டதோடு மறைந்தொழிந்திருந்தால் இப்பொழுதிருக்கும் நமது நிலை என்னவாக இருக்கும்? தத்துவப் பெருக்கால் தம்மை உயர்ந்தவர்களாக எண்ணி இறும்பூதடையும் சிலர் நம்மை எப்படி இழித்துரைப்பார்கள்.

''கல்லைப் பிசைந்து கனியாக்கி'' என்பதுபோல-நம்நெஞ்சக் கனகல்லை நெகிழவைக்கத் தாய்மொழி வழிபாடு உதவுகிறது. வழிபாட்டிற்குக் காதல், கனிவு, கசிவு தேவை. சிந்தனைவழி யாகவே காதல், கசிவு, கனிவு போன்றவை பிறக்கும். காதலும் கசிவும் உண்டாகி விட்டால் கோவிலிலே வக்கீல் வைத்து வணங்க வேண்டிய முறை தேவைப்படாது. யான் எனது என்ற செருக்கழித்து சமுதாயத்துக்கு நலம் பயக்கத் தெய்வ வணக்கம் பயன்படவேண்டும். இமயத்திலே, பொதிகையிலே ஊற்றெடுக்கும் தண்ணீர் எங்கும் பரவி விரவி ஓடிப்பயனளிக்கிறது. ஆனல் மனிதனின் இதயமலையிலே ஊற்றெடுக்கும் 'சிவமயம்' கோவிலோடும் பூசையறையோடும் நின்றுவிடுகிறது. வெளியில் வந்தவுடன் 'என் மயம்' ஆகிறது. எவ்வுயிர்க்கும் ஈசனுக்கும் தமக்கும் அன்புள்ளவர்களாக ஆக்கும் பெற்றி வழிபாட்டுக்கு உண்டு.

எனவே, இனத்தை ஒத்த மொழியிற் பிடிப்பும்-பாசமும் இருத்தல் வேண்டும். ஆண்டவனிடத்தில் சொந்த மொழி வழித்தொடர்பே அத்தகைய பலனைத் தருகிறது. இறைவன் பல வழிகளில் தமிழை அனுபவித்துச் சுவைத்திருக்கிறான். காசு கொடுத்தும், தூது நடத்தும் கன்னித் தமிழ் கேட்டதாக வரலாறு பேசுகிறது.

வடமொழியும் செந்தமிழும் வழக்கிழக்க வேண்டியவை யென்றால் வடமொழிக்குக் கொடுக்கப் பட்டதுபோல நம் தமிழுக்கும் இடங்கொடுக்கப் பட்டதா? இல்லையே! தமிழுக்கு இடங்கொடுக்கப்படாவிடில் தமிழர்களாகிய நாம் இடந்தேடி இன்பமடைய வேண்டாமா?

சுரண்டல்களினாலும் - சுயநலத்தினாலும் தமிழின் பின்தங்கியநிலை இப்பொழுது சமயத்துறையில் அருக ஆரம்பித்து விட்டது. இந்நிலை நல்லதொரு மாற்றத்தினை உருவாக்கி உண்மை நெறி உலகெல்லாம் பரவ உதவும் எனக் கருதி வாழ்த்தி விடை பெறுகிறோம்.

# பொகந்தலாவையில்

தலைமுறை தலைமுறைகளாக நாடுவிட்டு நாடுவந்து உழைக்கிறீர்கள். ஆனால் உழைப்பின் பயனை அனுபவிப்பதாகக் காணோம். உடலை வருத்தி வெய்யிலும், மழையும் துன்புறுத்த மலைக்கு மலை தாவித் தேயிலை எடுக்கிறீர்கள். காலை முதல் மாலை வரை அவதியுறுகிறீர்கள். துன்பம் காலப்போக்கில் களிப்பையும் சுகத்தையும் கொடுக்கும் என்பர். ஆனால் உங்களைப் பொறுத்தவரை மருந்துக்குக்கூட மகிழ்ச்சியைக் காணோம்.

நூற்றியிருபத்தைந்து ஆண்டுகளாக இலங்கைவாழ் மக்களின் பொருளாதார வளத்துக்கும், வனப்புக்கும் உங்களது உழைப்புப் பயன்பட்டதையும்-இப்போது பயன் விளைவிப்பதையும் நினைக்க நினைக்க நெஞ்சம் பூரிப் படைகிறது. உங்களை நீங்கள் உயர்த்தாத நிலைபற்றி இங்கு கவலையோடு திரு.வெள்ளையன் கசிந்துரைத்த வார்த்தைகள் எம்மைத் துணுக்குறச் செய்தன. உழைப்பிருக்கும் இடத்திலிருந்து இகழ்ந்தொதுக்குதலும் பிறாக்குதவா மனப்பான்மையும் அகலவேண்டும். வீணான முயற்சிகளும் வீண் செலவுகளும் வாழ்க்கையில் விரக்தியைத் தரக்கூடியன. பீடிகள், சாராயம் போன்றனவற்றில் உள்ள அதிக ஈடுபாடு உங்கள் வாழ்கையை நாசம் செய்வதாகவும் அறிந்தேன். மனத்திற்கு அமைதிதேடி மதுப்பழக்கத்தை மேற்கொள்கிறீர்கள் போலும். குடி குடலைக் கெடுத்து குணத்தை அழிக்கும். நரம்பைத் தளர்த்தி உடம்பை வாட்டும். மரணப்பாதையில் மயானத்திற்கு அனுப்பிவிடும். இவ்வெளிப்படை உண்மை விளங்கியும்கூட நீங்கள் அவ்வழிச் செல்வது அல்லலைத் தருகின்றது.

கடவுளின் பெயராலும் உங்கள் கட்குடிப் பழக்கம் வழக்கிலிருப்பதாகக் கேள்வியுற்று வருந்துகிறேன். நல்லனவற்றை நாடி வாழத்தான் நமக்குக் கடவுள் வழிபாடு இருக்கிறதே

தவிர, தியவற்றைத் தேடித்திரிந்து பெறுவதற்காக அல்ல. வாழ்க்கையிலே உங்களுக்கு மகிழ்ச்சி இல்லாமைக்குச் சிந்தனை யற்ற போக்குத்தான் காரணம். வாழ்வில் சிந்தனையில்லாது போனால் வரும்பொருள் சேராது-வளமும் பெருமையும் கிட்டா. நாளும் உழைத்ததைச் சேமித்து நல்வாழ்வுவாழ ஆசைப் படவேண்டும். பாடுபட்டு உழைத்து-அதற்குரிய பயனை அனு பவியாமற் போனால், அது மனிதத்தன்மையாகுமா? உங்களது வாழ்க்கைக்கு-நல்வாழ்வுக்கு வழி சொல்லக்கூடிய பெரியாரை உங்களிடத்திலே தேடிப்பிடித்து-அவர் சொல்லும் அனுபவ உண்மைகளுக்குச் செவிசாய்த்து நீங்கள்வாழவேண்டும். வாழ்க் கைத்துணை யில்லாதுபோனால் வாழும்இல்லறம் சிறக்காது என் பார்கள். இல்லாள் இல்லாத இல்லம் இடுகாட்டுக்கு ஒப்பாகும் என்பது நம்மவர் வழக்கு. இதுபோல் நல்ல அறிவுக்கு-நற்சிந் தனைக்கு நாம் பெரியாரைத் துணைக்கொள்ளவேண்டும். 'பெரி யாரைத் துணைக்கோடல்' என வள்ளுவரோ ஓர் அதிகாரம் வகுத்திருக்கிறார். நல்லவர்களாகிய பெரியவர்களின் துணை நாம் சிந்தித்து வாழவும். சிரித்து மகிழவும் அடிகோலும்! அவர்களின் துணையற்ற நிலை தீமையை உண்டாக்கும்; "பல்லார் பகை கொளலிற் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல்" என்கிறது தமிழ் மறை. உங்களுக்கு முன்னேற ஆசை இருக் கிறது. ஒரு முறையான - நெறியான ஒழுங்கில்லை. உங்களி டையே நீங்கள் நல்லவர்களெனக்கருதிப் பின்பற்றும் பெரியார் கள் நன் முறையைக்காட்டினால் அவ்வழிச் சென்று அவனியில் உயர முயலவேண்டும். பெரியவர்கள், வழியை - முறையைக் காட்ட முடியுமேதவிர வேறெதுவும் செய்யமுடியாது. குதி ரையை நீர்குடிப்பதற்காகக் குளத்துக்குக் கொண்டு செல்ல லாம்; நீர் குடிக்கவேண்டியது குதிரையேதான். கொண்டு செல்பவரல்ல.

தொழிலாளர் என்ற முறையிலே ஒற்றுமையாக-ஒரு குல மாக இருத்தல் வேண்டும். தொழில் இனங்களிடையே பிரிவும்-பிளவும் இருந்தால் காலப்போக்கில் கசப்பு முற்றிக் கைகலப்பிலும்-பெருங்கலவரத்திலும் முடியும். உழைப்பவர்கள் அன்பாகவும் ஒற்றுமையாகவும் இருந்தால் இன்னல்கள் இடு கண்கள் ஏற்படும்பொழுது ஓடிச் சென்று உதவமுடியும்-உதவி களைப் பெறமுடியும். தொழிலாளர்களது கட்டுக்கோப்பிலே-

திட்டமானதொரு முயற்சியால் பெட்டிபெட்டியாகப் பணம் சேர்க்கலாம். பலருக்கு உதவலாம். கட்டுக்கோப்பு இல்லையேல் நல்ல திட்டமும் இருக்காது. பெட்டியில் பணமும் நிரம்பாது. அவற்றுக்குப் பதிலாக வீட்டில் கடன் இருக்கும்-கவலையிருக்கும் -அழகாக அலங்காரமாக உடையணிந்து உலாவமுடியாது. போனால் மழையில் நனைந்து, வெய்யிலில் காய்ந்து என்ன பயன்? நல்ல குறிக்கோலோடு ஒன்றி வாழவேண்டும். ''ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு'' என்றும் ''கூடிவாழ்ந்தால் கோடி நன்மை'' என்றும் எண்ணி அதற்கேற்ற முறையில் வாழ்வை அமைக்க வேண்டும்.

தொழிலாளர்கள் பிளவுபட்டு பலப்பல சங்கடங்களை உண்டாக்குவது பயன்தராது. பிரிவும்-பிளவும் நன்மையைத் தருவதில்லை. இதனாலேதான் வள்ளுவர் 'பல்குழு' கூடாதென்கிறார். தொழிலாளியின் நலனைப் பேணக்கூடிய-மனக்கவலை பொருளற்ற துன்பம் போன்றவைகளை அகற்றக்கூடிய ஒரு மாபெரும் சங்கத்தை உண்டாக்க வேண்டும். உலகியலிலே-அதுவும் இன்றைய நிலையில் பொருள்தான் மிகமுக்கியமானது. வேராடினால் மரம் வளராது; பூத்துக் காய்த்துக் கனி தராது. அதுபோலவே பல நன்மைகளுக்கும் பொருட்சேமிப்பு அவசியம் வேண்டும். பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லையென்பதைப் போலவே பொருளற்ற சங்கத்துக்கும் வாழ்வில்லை; வளர்ச்சியில்லை. பொருளாதார வளம் உண்டாகிவிட்டால் வறுமையில் செம்மையோடு வாழ்க்கையில் நேர்மையாக வாழ வழி பிறக்கும். ஆன்மீகச் செழுமையும் அரும்பி வளரும். ஆகவே கட்டுக்கோப்பான ஒற்றுமையும், உழைப்பும், சேமிப்பும், நேர்மையும், செம்மையும் உங்களிடத்தே உருவாகவேண்டும். அத்தகைய நிலைக்கு ஆண்டவனது துணையும் அவசியமானது.

உங்களின் கட்டுக்கோப்பில் சாதியோ, மொழியோ, மதமோ குறுக்கிடக்கூடாது. அவை தலைகாட்டினால் கட்டுக்கோப்புக் குட்டிச் சுவராகிவிடும். நாமெல்லாரும் மனிதர்கள்; ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள்; நமக்கெல்லாம் தாயும் தந்தையுமான அம்மையப்பன் தலைவனாக இருந்து அருள் சுரக்கிறான். அவனது அருள் மழை நம் எல்லாருக்கும் சொந்தமானது.

எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கவே நம்மை ஆண்டவன் மனிதராகப் படைத்திருக்கிறான். பிறவிகளில் மனிதப் பிறவி உயர்ந்தது. ''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்று அவ்வைப் பிராட்டியும் ''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்'' என்று அப்பரடிகளும் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை எண்ணி ஒற்றுமையைப் பேணவேண்டும். ஒற்றுமை உணர்வை உண்டாக்கக் கல்வியறிவு அவசிய மானது. கல்வியில்லாத வாழ்வு காட்டு வாழ்வாகும். மற்றெல்லாச் செல்வங்களையும்விட, கல்விச்செல்வமே உயர்ந்த தென உயர்த்திப் பேசப்படுகிறது. ''கேடில் விழுச் செல்வம் கல்வி'' என்கிறார் வள்ளுவர். கல்வி இல்லையேல் சிந்திக்க இயலாது. சிறக்க இயலாது. கல்வி கற்கப் போதிய வசதி உங்களிடத்தில் இல்லாதது குறைதான். அக்குறையை நீக்கத் தோட்ட முதலாளிகள் முனையவேண்டும். அவர்கள் தொழிலாளிகளின் குழந்தைச் செல்வங்களைக் கல்விச் செல்வங்களாக்கினால் பொருட் செல்வத்தோடு புகழ்ச் செல்வமும் வந்தடையும்.

தொழிலாளர்களும் தமது குழந்தைகளைப் படிப்பிக்க ஆசைப்படவேண்டும். பட்டங்கள் பலபெற்று பாரில் சிறக்க முடியாவிட்டாலும் பண்பாக வாழப் பழகி - வாழ்வைக்கப் பழகக் கல்வி மிக அவசியம் தேவையானதென்பதை ஒவ் வொரு பெற்றோரும் உணரவேண்டும். படித்தும் முட்டாள் களாகத் திரியும் இந்தக்காலத்தில் படிக்காதும் போனால் என்ன ஆகும்.

படிப்பு பக்குவத்தைத் தருவதோடு பல்லுயிர்களோடு அன்பாக வாழவும் தூண்டுகிறது. நகரமும் நாடும் படிப்பு விஷயத்தில் போட்டி போடுகின்றன; நகரத்தைத் தோற் கடிக்கக் கிராமமும் கிராமத்தைத் தோற்கடிக்க நகரமும் போட்டி போடுகின்றன. இங்கிலையில் கெட்ட சிந்தனை களைத் தோற்கடித்து நல்ல சிந்தனைகளை வளர்க்க உங்கள் குழந்தைகளுக்கு கல்வி இன்றியமையாதது. சாப்பிடாமல் உயிர்வாழ முடியாததென்பதைப்போல் படிப்பில்லாமல் உயர முடியாது. வேட்டி கட்டிக்கொள்வது தனிமனிதனின் மானத் தைக் காப்பதற்கு மட்டுமல்ல சமுதாய ஒழுக்கத்துக்கும் பயன் படுகிறது. அதுபோலவே கல்வி தனிமனிதனின் நலத்துக்கு

மட்டுமல்ல - சமுதாய வளர்ச்சிக்கும் பயன்படுகின்றது. வாழ்க்கையில் துணிவை - தன்னம்பிக்கையைப் பெற உங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

இனி, கடவுளைப் பற்றிய எண்ணம் தொழிலாளர்களுக்கு எங்கும் எப்பொழுதும் வேண்டும். வேலைக்குச் செல்வதால் கடவுளை வணங்க நேரமற்ற நிலை உங்களுக்கு உண்டென்பதை நான் உணராமலில்லை. தேயிலைக் கொழுந்தைக் கொய்யும் பொழுதும், கூடையில் போடும்பொழுதும் கடவுளை நினைக்கலாம் - வணங்கலாம். கூடையில் கொழுந்தைப் போடும் பொழுது, முருகா! முருகா! என்று சொல்லிப் போட்டால் அதுமுருகனுக்கு லட்சார்ச்சனையாகிவிடும். மலையின் உச்சியிலே கொழுந்து கொய்யும் உங்களுக்கு ஏறுமயிலேறி மலைதோறும் மகிழ்வுடன் உலாவரும் முருகக்கடவுளின் கருணைகிட்டும்.

ஆகவே! தொழிலாளர்கள் கட்டுக்கோப்புடன் ஒற்றுமையாக - ஒரு குலமாக வாழ்ந்து, கல்விச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் பெற்று, சிறப்புடன் திகழ்ந்து கவலையற்ற, நேர்மையும் செம்மையும் நிரம்பிய நிலையுடன், குடி கெடுக்கும் செயல்களைத் தள்ளி - திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து, யாவரும் தேர்ந்த கல்வி ஞானமெய்தி வாழ வாழ்த்தி விடைபெறுகிறோம்.

# அட்டனில்

கலைகள் கருத்தைக் கவர்வன; களிப்பைத் தருவன கருத்தற்ற கலைப் படைப்புக்கள் கால வெள்ளத்தை எதிர்த்து நீந்தி நின்று வாழ இயலாதவை. கருத்து, கற்றறிந்தோர் உள்ளத்திலே தேங்கி நின்று தேசிய உணர்ச்சிக்கும் சமுதாய உயர்வுக்கும் உதவக்கூடியது; காலத்தால் மூத்த நமது இனம் கருத்திலே நாட்டம் கொண்டதாலேதான் கருத்தரங்கங்களில் ஏறி நின்று ஏற்றம் பெற்றது; கருத்துவழி வாழ்வு வாழ்ந்து மகிழ்ந்தது; கருத்துக்களிலே நல்லனவும் தீயனவும் உண்டு. கருத்து என்ற பேரில் உண்டாகும் எல்லாமே வாழ்வுக்கு உகந்தனவாக இருந்ததில்லை - இருப்பதுமில்லை - இருக்கவும் முடியாது.

இயல் இசை நாடகம் போன்ற கலைகள் தமிழனைப் பொறுத்த மட்டில் மகிழ்வை ஊட்டியதோடு-வாழ்வையும் காட்டின. ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற உண்மையைத் தமிழர்களின் கலைகள் எடுத்தியம்பின. இதனாலே கலைவழிக் கலாசாரம் முகிழ்த்து, அன்பும் அறனும் பண்பும் பணிவும் மலர்ந்தன. கருத்து வழிப்பட்ட வாழ்வு அரும்பி மலர்ந்து மணம்வீசக் கலைகள் பயன்படவேண்டும். இசை நாடகம் போன்றவற்றை அழகுக் கலைகள் என்கிறோம். அழகுக்கலைகள் ஆழ்ந்தகன்ற நுண்ணறிவை ஆக்கவேண்டும். இறந்தகாலத்தைப் பற்றிய அறிவையும் நிகழ்காலத்தை யொட்டிய கருத்தையும் வருங் காலத்தைப்பற்றிய திட்டத்தையும் தமிழ்க்கலைகள் எடுத்துச் சொல்லவேண்டும். கல்லூரிகளிலே கற்கும் சிறுர்களின் நற்சிந்தனைக்கும்-நல்ல முன்னேற்றத்திற்கும் கல்லூரி விழாக்களில் இடம் பெறும் கலைநிகழ்ச்சிகள் உதவவேண்டும். பருவம் அறிந்த பக்குவம் தெரிந்து கலை நிகழ்ச்சிகளின் மூலம் நற்கருத்துக்களைத் தூவி விடவேண்டும். இன்றைய நிலையிலே பள்ளி

களின் மூலமாகப் போதிக்கமுடியாத நற்கருத்துக்களை மாண வர்க்குக் கலைகளின் வழியே போதித்து விடலாம். இப்போது கலைகளை அனுபவித்துப் போற்றும் சூழ்நிலை இளைஞர் களிடத்திலே உருவாகியுள்ளது. அந்த நல்ல நிலையைப் பயன் படுத்தி நயத்தக்க கருத்துக்களைக் கலைகள் மூலம் கற்பிக்க வேண்டும்.

''கற்றிலனாயினுங் கேட்க'' என்றார் வள்ளுவர். அதைப் போல் படிப்பிலனாயினும் பார்க்க எனலாம். இளைஞர்கள் நடிப்பு நடனம் போன்றவைகளைப் பார்த்து அனுபவிக்க விரும்புவது போல் அவைகளினூடாக வரும் கருத்துக்களை யும் கேட்க வேண்டும். கேள்வியறிவு பேரறிவைத்தரவல்லது. பார்த்துப் பெறுமனுபவங்கள் பாரிற் சிறக்க வழிசெய்யும்; புத்தகத்தையே தொடாத-படிக்காத சில பாமரமக்கள் கேள்வி யறிவினாலும் வாழ்க்கையனுபவத்தாலும் உயர்வதைப் பார்க்கி றோம். கல்வியாற் பெற்ற உண்மைகளோடு காட்சியாலும் கேள்விகளாலும் பெறும் கருத்துக்களும் உலகியல் வாழ்க் கைக்கு அறுதுணையாய் நின்று உதவக் கூடியன; கலைகள் காட்டும் கருத்துக்களிலே கழிப்பதைக் கழித்துக் கொள் வதைக் கொள்ள வேண்டும். உலகப் பெரியார் சொன்னதைப் போல் குணம் நாடிற் குற்றம் களைய வேண்டும். வாழ் வுக்குப்பயன் அளிக்காத வாழ்வையே அழிக்கக்கூடிய சில கருத்துக்கள் சுவையுடன் வெளிப்படுத்தப் படுவதால் இளை ஞர்களை அவை ஈர்த்து விடுகின்றன. கள்ளமோ களங்கமோ இல்லாத வெள்ளை உள்ளங்கள் அக்கருத்து வழிச்சென்று வாழ்வின் பயனை அனுபவிக்காது அல்லலுறுகின்றன. பிஞ்சு நெஞ்சங்களை நற்கருத்துக்கள் பிணிக்க வேண்டும். பிறப்பொக் கும் எல்லாவுயிர்க்கும் ஈதல், இசை படவாழ்தல், இன்னுசெய் தார்க்கு நன்னயம்செய்தல், காலத்தினாற் செய்யும் உதவி, அன் புக்கும் உண்டோ அடைக்குந்தாழ். அறனெனப்பட்டதே வாழ்வு, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் போன்ற வேண் டப்படும் கருத்துக்கள் கலைகளின்மூலம் புகுத்தப்படவேண்டும்.

நல்லெண்ணமும், நல்லுறவும் நற்சிந்தனையும் நாடுமுழு வதும் பரவிப் பெருகக்கலைகள் பயன்படவேண்டும். அறிவைத் தேடிக் கொள்ளதவர்கள் வாழமுடியாது அவதிப்படுகிறார் கள். அதிகம் படித்தவர்கள் திக்கு முக்காடுகிறார்கள். நடுத்

தரப்பிரிவினர் இரண்டுங் கெட்ட நிலையில் இன்னலுறுகின்றார்கள். இவர்களுக்கெல்லாம் அறிவை, நிம்மதியைச் சலனமற்ற நிலையைக் கலைகள் காட்டவேண்டும். நாட்டிலே நாடகமேடைகளிலே மட்டும் கலையும் கலையைச் சார்ந்த கருத்துக்களும் மின்னி முழங்கிவிட்டாற் போதாது. வீடுகள் தோறும் கலையின் விளக்கம் என்று கவிஞன் பாரதி கூறியது போல் கலைகள் இல்லங்கள் தோறும் எழுந்தருளி இருள் நீக்கி ஒளிபரவவேண்டும். நமது நாட்டிலே நம்மிடையே கலைப்பெருக்கத்திற்குக் குறைவில்லை. பெருக்கமிருக்கிறதே தவிர பெருக்கத்தை யொட்டிய பலனைக்காணோம். நமக்குள் ஒருநல்ல மனப்பான்மையுண்டு; அதுஎதையும் பாராட்டுதல். வீணை வித்துவானை நடிப்புச் செல்வனை-பாடலாசிரியனை-இசை விற்பன்னனைப் பாராட்டி மகிழ்வதில் நமக்கு ஒரு தனிவிருப்பு. பாராட்டி மகிழ்வதோடு பயன்களையும் விளைவிக்கவேண்டும் கலைகள் வெறும் பாராட்டுகளோடு நின்றால் வாழ்வுக்குப் பயன்படாத வீண்பொழுது போக்காய் முடியும். நம்மிடையே சந்தேகமும் கள்ளத்தனமும் இப்போது உருவாகியிருக்கின்றன. பொருள் உள்ளவனிடத்திலே இல்லாதவன் களவாய்க் கவர்ந்து செல்ல நினைக்கின்றான். பொருள் உள்ளவன் நல்லவனைக் கூடச் சந்தேகித்து தற்காப்புத் தேடிப் பொருட்காப்புச் செய்கின்றான். முன்பெல்லாம் பனி, மழை, வெய்யில் போன்றவற்றிற்கும் விலங்குகள் போன்றவற்றிற்கும் தப்பிக்கொள்ளவே தற்காப்புத்தேடி வீடுகளைக் கட்டினார்கள். இன்று பக்கத்து விட்டானைப் பகைவனாக்கி அவனை நம்பாமல் திருடனாக்கி அயோக்கியனாக்கி அவனிடம் இருந்து நம்மை நாம் காப்பாற்றவே வீடுகளை எழுப்புகிறோம். களவு காவல் என்ற தத்துவ அடிப்படையில் வீடுகளைக் கட்டுகிறோம்.

இந்த நிலை மாறவேண்டும். மாற்றத்தைக் கலைகள் போதிக்க வேண்டும். மனித வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் வேண்டிய நல்லுணர்வுகளைக் கலைகள் காட்ட வேண்டும். உழைத்துப் பிழைத்து முன்னேற வேண்டிய அவசியத்தை உணர்த்த வேண்டும். பாடுபடுபவன் உழைப்பவன் நல்லபடி வாழ-அதிக ஆசையற்றுப் போதுமென்ற மனத்துடன் பொதுமை வாழ்வில் அக்கறை கொள்ள மனிதனை ஆற்றுப்படுத்தி ஆவன செய்ய வேண்டும். கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்று நொந்த, நைந்த

மனோபாவத்துடன் தூங்கும் ஏழையை விழிக்கவைக்க வேண்டும். சமுதாய விழிப்பிற்கும்-அகத்துறைப் புரட்சிக்கும் கலைகள் தொண்டாற்றி வெற்றி பெற வேண்டும்.

கடவுள் நம்பிக்கையில் ஊறிய-தெய்வக் கொள்கையைப் பாராட்டுகிற மனித சமுதாயத்தை உண்டாக்கி-சமவாய்ப்புச் சமுதாயத்தில் நாட்டம் கொண்டவர்களை வாழ்த்தவும் கலைகள் வழி வகுக்க வேண்டும். முதலாளி தொழிலாளிகளுக்கிடையே இருக்கிற வேற்றுமைகளை அழித்தொழித்து அருள் வெள்ளம் பெருக்கெடுத் தோடுமாறு செய்ய வேண்டும். இறைவன் ஒருவனே நமக்கெல்லாம் முதலாளி. நாம் எல்லோரும் அவனது தொழிலாளிகள் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் அரும்பி மலர வேண்டும். தாய் மொழிப் பற்றும் தாய் மொழி நாகரிகமும் தாய்மொழி வழிபாடும் எங்கும் எல்லோரிடத்திலும் பரவ வேண்டும். மனிதர்களிடையே ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில் என்ற மனோதத்துவம் தேவை. மனிதர்களிடையே பாமர மனிதர்கள் இருப்பது நமக்கு இழிவைத் தருகிறது; மரங்களிலே கூட பாமரங்கள் இல்லை. தென்னையிலோ, பனையிலோ, பலாவிலோ பாமரர்கள் உண்டா? ஆனால் நம்மிடையே எத்தனை வகைப்பட்ட பாமரங்களை உண்டாக்கி இருக்கிறோம்.

எனவே! கலைகள் கருத்தைக் கொண்டனவாக-கருத்தை இருத்தி இன்ப அன்பு வாழ்வுக்கு அடிகோலுவனவாக இருக்க வேண்டும். மனித மனங்களைத் தவிர ஏனைய உயிர்களின் உள்ளங்களைப் பிணிக்கும் ஆற்றல் கலைகளுக்கு உண்டு. குறிப்பாக ஆனயநாயனாரின் வரலாறு இசைமூலம் மிருகஇனத்தையும், பறவையினங்களையும் ஈர்த்திழுத்தமையைக் காட்டி நிற்கிறது. ஆகவே கருத்தைப் பிணிக்கும் கலைகள் நயத்தக்க கருத்துக்களைப் பரவச் செய்யப் பயன்படவேண்டும்; கலைஞர்களும் தேவையானவற்றைக் காட்டவேண்டும்; போதிக்கவேண்டும். மக்கள் விரும்புவதைக் காட்டக்கூடாது. மக்களுக்கு எது தேவையோ அதைக்காட்டவேண்டும்! வாழ்க்கை ஒரு நாடகம் நாம் எல்லாம் நடிகர்கள். நடிகர்களிடத்திலே நல்லுணர்ச்சி உண்டென்றால்தான் நாடகம் சிறக்க வழியுண்டு; நல்லுணர்ச்சியோடு நற்சிந்தனையாளரைப் படைக்க வழியுண்டு. நல்லுணர்ச்சியோடு நற்சிந்தனையாளரைப் படைக்க கலைகள் உதவ வேண்டுமெனக் கேட்டு வாழ்த்தி விடைபெறுகிறோம்

# கொழும்பிலே !

இந்த நூற்றாண்டிலே நமது சமயத்தைப்பற்றிய சிந்தனை அருகிவருகிறது. வாழ்வுப் பிரச்சனைகளாலும் வேறுசில சூழ் நிலைகளாலும் கடவுள் நெறி பற்றிய எண்ணம் குறைந்து வரு கின்றது சிவநெறித் தத்துவத்தின் வழி வாழ்தல் என்பதும், சைவசமயக் கொள்கை வழித்தொண்டு என்பதும் இப்போது மாறிக் குழம்பிக்கிடக்கின்றன. இது ஒருவிதக் கலப்பாலும்— கலப்பினாலுண்டான சபலத்தாலும் வெள்ளத்தால் அள்ளுண்டு போவதைப் போன்றநிலை எப்படியோ வந்து புகுந்துவிட்டது. நான் பிறமத எழுத்தாளனல்லன். ஆனால் நமக்கென ஒருகால் தேவை - ஒரு நெறி தேவை என்பவன். கலப்பு என்பது சுயத் துவத்தை அழிக்கவல்லது. உலகியல் நாகரிகங்களின் வர லாற்றிலே ஒன்றையொன்று கௌவி விழுங்கிய செய்திகளைப் படிக்கிறோம். மற்றையக் கொள்கைகளை - நெறிகளைப் பாராட் டுவதோடு, நமது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வலுப் படுத்த உழைக்கவேண்டும்.

சைவசமய வளர்ச்சிபற்றி ''வரைப்படம்'' (Graph) படம் போட்டுப்பார்த்தால் நிலைமை பளிச்செனப் புலப்படும். இந்நிலைமாற - மாற்றப்பட நாம் தீவிரமாக முனையவேண்டும். பன்னெடுங் காலமாகக் கழிபேருவகையுடன் நல்வாழ்வுச் சூழலை உருவாக்கி உதவிய சைவநெறிபற்றிய எண்ணமும் செயலும் நம்மிடையே தோன்றி வளரவேண்டும். (மனிதனின் வாழ்வை மலரச்செய்யவும் - மணம் பரப்பச் செய்யவுந்தான் மதங்கள் உதவுகின்றன. வெறும் சடங்குகள், உபதேசங்கள், போதனைகள் போன்றவற்றோடு மதம் நின்று விடக்கூடாது.) அச்சம், ஆத்திரம், புகைச்சல், பொறாமை போன்றவை இன்றைய மனிதனை ஆட்டிப் படைக்கின்றன. இத்தகு இழிந்த மனப்பான்மையை ஒழிக்க மதம் உதவவேண்டும். உயிர்த்தொண்டுக்கு - உலகத் தொண்டுக்கு ஆன்மாவை

ஆற்றுப்படுத்தும் பெரும் பொறுப்பு சமயத்துக்கு உண்டு.

அச்சமும் ஆத்திரமும் போன்றே ஐயமும் சஞ்சலமும் குழப்பமும் மனித மனங்களில் குடிகொண்டிருக்கின்றன. சந்தேகத்தைமாற்றச் சைவத்தை ஒட்டிய சில முடிவுகள் உதவு கின்றன. சைவசித்தாந்தமென்பது ஒரு சிவநெறித் தத்துவம். முடிந்த முடிபான கொள்கையைக் கொண்டது. சிவத்திரு ஆறுமுகநாவலர் அவர்கள் ''சைவ சித்தாந்தமே சித்தாந்தம்; மற்றவையெல்லாம் பூர்வபக்கங்கள்'' என்றார். சிந்தைசெல்லு மிடமெல்லாம் சென்று முடிந்த முடிபைக் காண்பது சித்தாந் தம்; சைவசித்தாந்தக்காரர்கள் மனிதகுலச் சஞ்சலங்களை அகற்றுவதோடு - நாத்திகத்தைத் தர்க்கமுறையில் வெல்லலாம்; வெல்ல முடியும். குழப்பமே தெளிவுக்கு அடிப்படை. இப்போது சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சில ஒரு குழப்ப நிலையை உண்டாக்கியிருக்கின்றன. இனித்தெளிவு வரலாம்; கட்டாயம் வந்தே தீரும்.

''சிந்தையுள் தெளிவுமாகித் தெளிவினுள் சிவமுமாகி'' என்றார் அப்பரடிகள். தெளிவிலே சிவநெறி ஊறிச் செம்மை நலங்கள் காணும் நாள் அதிக தூரத்திலில்லை. என்றும் நம்மை அவன் ஆட்டுவிக்கிறான்; நாம் ஆடுகிறோம் — அடக்கு விக்க நாம் அடங்குகிறோம். அநாதி காலம் தொட்டே அநாதி யான ஆன்மா ஆண்டவனிடத்தில் அடிமைப்பட்டிருக்கிற தென்பதைத் தாயுமானவர் அழகுறச் சொல்கின்றார்.

> ''இரும்புநேர் நெஞ்சக் கள்வனுனாலும்
> உன்னை இடைவிட்டு நின்றதுண்டோ''

என்று நீ அன்று நான் உன்னடிமையல்லவோ - ஏதேனும் அறியா வெறுந்துரும்பனேன்; என்னினும் கைவிடுதல் நீதியோ'' என்கிறார். நமக்கு வரும் இன்பதுன்பங்களுக்கு அவனே பொறுப்பாளி. இந்த விடை மிகமிக ஆழமான குளத்துநீரில் ஒரு திவலை. கற்கண்டில் ஒரு துண்டு. நானே கடவுள் - நானே பிரமம் என்றால் பொருந்துமா? ''குறைவிலா நிறைவே கோதிலா அமுதே'' என்கிறது திருவாசகம். பரி பூரண நிறைவுக்குப் பெயர் கடவுள். அப்படியானால் அவனின் பிரதிபிம்பமான நாம் ஏன் நிறைவற்றுத் தொல்லைப் படுகிறோம்? இறைவனின் குழந்தைகளாக, இறைவனின் அடியார்களாக நம்மை நாம் எண்ணிக்கொள்ள வேண்டும். நமது சைவநெறி

வாழ்வைத் தழுவியது; வாழ்வோடு இணைந்து பிணைந்தது. நிறைவான குடும்பவாழ்வே சித்தாந்தச் சிவநெறி வாழ்வாகும்.

சேக்கிழார் பெருமான் சிவநெறித் தொண்டர்களைப்பற்றி நிறையச்சொல்லியுள்ளார். பூசலார் நாயனார் மனத்திலே கோவிலெடுத்து மகேசனைக்கண்டார். (கோவிலுக்குப் போக வசதியில்லாதவர்கள் - வாய்ப்பில்லாதவர்கள் மானசீகமாக இறைவனை வழிபடலாம். திருக்கேதீஸ்வரம் செல்ல வசதி யில்லாவிட்டால் - திருக்கேதீஸ்வரப் பதிகம்பாடிப் பாலாவியின் கரைமேல் ஆண்டவனை அகத்திலே காணலாம். நாவுக்கரசர் உழவாரத்தொண்டால் கடவுளைக்கண்டார். திருக்குறிப்புத் தொண்டர் மெய்யடியார்க்குத் துணி துவைத்துக் கொடுத்துப் பரமன்பதம் அடைந்தார். நாமெல்லாம் நாயன்மார்களின் குருபூசைகளைக் கொண்டாடுகிறோமே தவிர அக்கொண்டாட்ட நாளில் தேவையானவற்றைச் செய்வதில்லை.

(கண்ணப்பநாயனார் குருபூசையில், கண்பார்வை குறைந் தவர்களுக்குக் கண்ணாடி வாங்கி வழங்கும் வழக்கம் மேற் கொள்ளப்பட்டால் எவ்வளவு நன்மைபெருகும்.) நாம் கைக் கொள்ளவேண்டியது நால்வரின்நெறி. நால்வரின் இயக்கம் சமுதாய இயக்கம். நால்வரின் வழிச்சென்றால் நம்மிடையே ஒரு ஒழுங்கு உண்டாகும். நமது மதம் இப்போது ஒழுங் கில்லாமற் கிடக்கிறது. ஒழுங்குபடுத்தப்பட்ட மதமாக நமது மதம் மிளிரவேண்டும். (வெள்ளையன் தமது மதமான கிறித் தவத்தைத் தவிர்ந்த ஏனைய மதங்களை ஒன்றாக்கி இந்துமதம் என அதற்குப் பெயரிட்டான். இதனால் சில தனித்தன்மைகள் கெட்டுவிட்டன. கலப்பு ஒருபோதும் தனித்தன்மைகளைக் காப்பாற்ற உதவாது.) மற்றைய மதங்களிடையே உள்ள ஒழுங்கு நம்மிடையே இல்லை. பன்னிரண்டு இலட்சம் இந்துக் களும் ஒன்றானால் ஒருநல்ல விழுமிய ஒழுங்கு உண்டாகலாம். அப்பொழுதுதான் மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்க வழியுண்டாகும்.

நாம் மதம் மாறியதைப் போன்று வேறுயாராவது மாறியிருக்கிறார்களா? நம்மிடையே எண்ணத்தொலையாத எத்தனையோ பேர் மதம் மாறியிருக்கிறார்கள். நம்முடைய மதத்துக்கு வேறு மதத்தவர்கள் வந்ததுண்டா? நம்மைப் பொறுத்த அளவில் மதமாற்றம் சர்வசாதாரணமாகி விட்டது. இந்நிலைமாற சைவத்தமிழுலகம் பாடுபடவேண்டும். சிவநெறி

பரப்பும் மடங்கள் ஆன்மாவுக்குத் தலைவனான ஆன்மநாயகனை வழுத்துவதோடு நின்றுவிடுவதற்கில்லை. திருமடங்கள் திருத்தொண்டால் சிவநேயச்செல்வர்களை உருவாக்கவே எழுந்தவை. எந்நாளும் சமயப்பிரச்சாரம் செய்து சித்தாந்த சிவவழிநிற்கவே அவை உதவுகின்றன. மனிதகுலத்துக்கு மாண்தபுறுத்துவங்களைப் போதிக்கவே சைவமடங்களை நம்முன்னோர்கள் உண்டாக்கினார்கள். ஆனால் அவர்களது எண்ணம் சிலகாலம் சிதைவுற்றுப் பிறழ்ந்ததை மறுப்பதற்கில்லை. இப்பொழுது இந்நிலை மாறிவருகிறது. கைலாயத்து உச்சியுள்ள காளத்தியானைக் கண்ணிலேகண்டு மற்றவர்களுக்குக் காட்ட சைவப்பெரியார்கள் முன்வரவேண்டும். இதனாலேதான் சைவசமயத்துக்கு முழுநேர ஊழியர்கள் தேவை என்கிறேன். இறைவனைக் கைலாசவாசியாகவே சிலர் கருதுகிறார்கள். வான் பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொள்பவன் நம்பெருமான். ஆண்டவனை எட்டவைத்து எண்ணும் நிலை மாற வேண்டும். மண்ணிலே விண்ணைக்கண்டு விண்ணகத்து வித்தகனை நெஞ்சத்தில் அமர்த்தவேண்டும். தட்டினால்தான் திறக்கப்படும் கேட்டால்தான் கொடுக்கப்படும் என்று தமது சைவநெறி சொல்லவில்லை. வேண்டப்படுவதை அறிந்து வேண்டிய முழுதும் தருபவன் இறைவன். ஆகவே!

நால்வர் நடந்து நடந்து வளர்த்த நமது நெறி நாலாபக்கமும்பரவி விரவ வேண்டும்; ஒரு ஒழுங்குமுறையான கட்டுக்கோப்பு நமக்குத்தேவை. கலப்பு, ஒழுங்கினை உண்டாக்க இடையூறாயிருக்கும். மற்றைய மதங்களிலுள்ள ஒழுங்கினை நமது மதத்தில் காண நாம் விரும்பவேண்டும். மதம் மாறும் நிலையை நம்மிடையேயிருந்து விலக்கவேண்டும் எனக்கூறி வாழ்த்தி விடை பெறுகிறோம்.

# குனுகலோயாவில்

உங்களது அன்புக்கும் பாராட்டிற்கும் முதற்கண் என் அகங்கனிந்த வாழ்த்து. கண்ணுக்கும், செவிக்கும் விருந்தளிக்கக் கூடிய அழகிய இயற்கைச் சூழலில் வாழும் உங்கள் முன் நிற்பது மகிழ்வைத் தருகின்றது. மனிதப் பிறப்பின் மாண்புறு நிலையை நயக்கத்தக்க நல்ல வழியில் அனுபவித்து உயரப் பழகிக் கொள்ள வேண்டும். மனிதன் வேகமாக உழலுகிறான், சுழலுகிறான், ஆனால் ஏன்? எதற்காக உழலுகிறோம்? என்று அவன் சிந்திப்பதில்லை. குறிப்பாகத் தமிழர்களாகிய நமக்குக் கேள்விகேட்பதென்பதே கசப்பாயிருக்கிறது. எதையும் துருவித்துருவி நுணுக்கமாகவும் ஆழமாகவும் ஆராய்ந்ததினாலேதான் தத்துவாசிரியர்களும் பெரும் பேராசிரியர்களும் தோன்றினார்கள். மனிதச் சுழற்சி ஒரு விதத் தூய்மையைத் தருகிறது. அனுபவ உண்மைகள் அகத்தினை அலசித் தூய்மையாக்கித் துலங்கவைக்கின்றன.

கடலிலே உள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தினால் வான் நோக்கிச் சென்று, மீண்டும் மழையாகி மலைவழியே வருகிறது. மனிதனின் உள்ளப்பாங்கில் உப்புத்தன்மை நிறைய உண்டு உப்புத் தன்மை சுழற்சி அனுபவத்தால் அற்றுப் போகிறது.

தங்கத்திற்கு எவ்வளவோ மதிப்புண்டு. அதை யொட்டிய வரலாறே பெரிது. நிலத்திலே தோன்றி வளர்ந்து நமது கைக்கு வந்து பலவழிகளிலும் பக்குவமாகிப் பயன் படுத்தப்படுகிறது. நம்முள்ளே உள்ள ஆன்மா தங்கத்துக்குச் சமமானது. ஆனால் அது நிறைந்த பல அழுக்குகளால் பின்னப்பட்டுக் கிடக்கிறது. அழுக்கை அகற்றி ஆன்மாவை நல்வழிப்படுத்த ஆன்மநேயத் தொண்டுகளிலும் சிந்தனைகளிலும் நாம் ஈடுபடவேண்டும். அழுக்கை அகற்றவே ஆண்டவன் நம்மை இங்கு அனுப்பினான். இன்னும் தெளிவாகச் சொல்ல

வேண்டுமானால், நன்றாகக் குளித்துவிட்டு வாருங்கள் என்று நல்ல நீர்த்தேக்கத்தைக் காட்டி விட்டிருக்கிறான். நாம் நீர்த் தேக்கத்தைப் பற்றி நினைத்துப்பாராமல் அதனருகே நாற்றம் எடுத்துக்கிடக்கும் சேற்றினை வாரிப் பூசிக்கொண்டிருக்கிறோம். உடலுக்கு நலம் தேவை என்பது மறுக்க முடியாதது. உடல் நலத்தோடு உள்நலத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

உடலைத் தூய்மையாக்கப் பலவகையான சோப்புக்களை உபயோகிக்கின்றோம், ஆனால் உள்ளத்தூய்மைக்கு எந்தச் சோப்பையும் நாம் தேடுவதில்லை. உள்ளத்தின் அழுக்கினைப் போக்க வல்ல சோப்பை ஆண்டவனிடத்திலே தான் நாம் சென்று பெற வேண்டும். தேவாரம் திருவாசகம் போன்றவற்றைப் பணமாகக் கொடுக்க எம்பெருமான் நம் உள்ளங்களைத் தாமாகவே கழுவிச்சுத்தமாக்கி விடுவர். எல்லாருக்கும் எல்லாச் செல்வங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ விருப்பமுண்டு. ஆனால் முயற்சி செய்து முன்னேற முடியாத சோம்பல், உயரவிடாமல் தடுக்கிறது. முயற்சியின்றியே எல்லாம் வரவேண்டும் என்று கருதும் மனப்பான்மை மறையவேண்டும். உழைப்பில் ஊக்கமும், சேமிப்பில் நாட்டமும் செலவில் சிக்கனமும் தேவை. உழைப்பைக் குறைத்துச் செலவைப் பெருக்குவதுதான் இன்றையநிலை. உழைப்பின் வழியால் வரும் வருவாய் சிறிதானாலும் செலவின் வழி விரிவாக இல்லாவிட்டால் தீங்கில்லை என்கின்றார் வள்ளுவர்.

> "ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
> போகாறு அகலாக் கடை"

என்பது அவரது குறள். மலரும், செடிகொடிகளும் பார்ப்பதற்கு அழகைத் தருவது போல, மனிதர்களும் அழகைத் தர வேண்டும். அத்தோடு நறுமணம் கமழுஞ் சூழலையும் உண்டாக்கவேண்டும். எல்லாருக்கும் பயன் படத்தக்க வாழ்வினை வாழவேண்டும். இடுக்கண் வரும் பொழுது சிரித்துப் பொறுத்தலும், துன்பங்கண்ட விடத்துத் துடித்துத் தோள் கொடுத்துத் துணை செய்வதும் மனித வாழ்வின் மாண்புறு தத்துவங்கள். நம்மைப் படைத்தவனிடத்திலே ஒரு வஞ்சனையும் கிடையாது-அவன் பொதுவானவன். காற்றும் நிலவும் சூரியனும் எதுவும் கேட்காது-பலன்கருதாது பயன் தருவது

போல இறைவனும் எதுவும் விரும்பாது அருள் சுரக்கிறான். ஆண்டவனின் அருள் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதை நாம் அறிந்து அதனைப் பெற்றுப் பலனை அனுபவிக்க வேண்டும்.

நன்னீர்ப் பெருக்கை அணைகட்டி நல்லமுறையில் வாய்க்கால் வழிச் செலுத்திப் பயிர்த்தொழிலுக்குப் பயன் படுத்திக் கொள்வதைப் போன்று அருள்நீர்ப் பெருக்கைப் பாய்ச்சி அப் பயிருக்கு ஆக்கமளிக்க வேண்டும். பயிர்த்தொழிலில் மிக மிகக் கவனமாய் இருப்பது அவசியம். களைகளைக் களைந்து, யானை போன்ற மிருகங்களிடமிருந்து காத்து-நாற்று நட்டால் தான் நெற்பயிர் வளர்ந்து வீட்டுக்கு வந்து, பசியைப் போக்கும். அகப் பரப்பில் ஆன்மீகப்பயிரை அருள் நீரால் வளர்த்து ஐம்புலவேடர்களின் முற்றுகைகளிலிருந்தும் காத்து, ஆன்மநேயர்களாக வேண்டும்.

மூளை விரிவதைவிட இதயம் விரிய வேண்டும். இதயவிரிவு ''இன்பமே துன்பமில்லை'' என எண்ணி ஆன்மீகப்பயிர் வளர்க்க உதவும். இன்பத்தைக் குறைவிலாது அள்ளித் தரும் இறைவன் நமது அழுக்குகளை வாங்குவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறான் ஆண்டவனது பிச்சாடன மூர்த்திக் கோலம் நிகரில்லா உண்மையை வெளிப்படுத்துகிறது. ஆன்மாக்களின் நன்மைக்கும், நல்வாழ்வுக்கும் இடையூறாயிருக்கும் எல்லாவற்றையும் பிச்சை கேட்பதைப் போல் கெஞ்சிக் கேட்டுப் பெறுகிறான். அவனது கெஞ்சும் நிலையைப் பெற அவன் திருவடிகளில் ஆழக்குளிக்க வேண்டும். நீராடல் உடல் நலம் தருவதுபோலவே திருவடிக் குளிப்பு ஆன்மநலம் நல்கும். ஆன்மநேயத்திற்கு அன்பே அடிப்படை அன்பில்லாமல் ஆன்மீகப் பயிர் வளராது. என்னதான் படாத பாடுபட்டாலும் அகப்பரப்பிலே அன்பு விதையைத் தூவாவிடில் என்னபயன்? கடவுள் நம்பிக்கை என்றவிதை அன்பை உருவாக்க உதவுகிறது. அன்பு விதை அருள் என்னும் குழந்தையை ஈன்று புறந் தருகிறது. அறம் இன்பத்தை தருகிறது.

பலனைப்பெற அதற்கு மூலகாரணமானது எதுவோ அது பயன் படுத்தப் படவேண்டும். ஓர் ஊரிலே இரு சகோதரர்கள் இருந்தார்கள்; இருவரும் விவசாயிகள். ஒருவன் விவ

சாயத்துறையிலே பாடுபட்டுப் பயனடைந்தான். மற்றவனே பாடுபட்டான். ஆனால் பயனைப் பெறவில்லை. பயன் கிட்டாததால் ஒருவித வெறுப்பு அவனிடத்தே அரும்பியது. வாழ்வில் வெறுப்புக் கொண்டவன் போல் நின்றான். அவனருகே ஒரு பெரியவர் அணுகி வேளாண்மைபற்றி விசாரித்தார். அப்பொழுதுதான் அவன் வேதனைக்கு வித்தான வேடிக்கை வெளியானது. 'உழுதாயா? பரம்படித்தாயா? உரம் போட்டாயா?' என்றெல்லாம் பெரியவர் கேட்டார். ''ஆம். ஆம்'' என்றே அவன் பதில் சொன்னான். பெரியவருக்கு ஐயம் எழுந்தது! உடனே ''விதை போட்டாயா?'' என்று கேட்டார். விவசாயி விழித்தான்.

இரத்தத்தை வியர்வையாக்கி காலைமுதல் மாலைவரை உடலை வருத்திப் பாடுபட்டவன் விதைபோட மறந்து விட்டான். வேளாண்மை பயன்படுமா? விதை இல்லாது எங்காவது விளைச்சல் இருக்குமா? அது போல, வாழ்வின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் கடவுள் நம்பிக்கை என்ற விதைவேண்டும். கடவுள் நம்பிக்கை அற்றவாழ்வு விதைக்காத வேளாண்மைக்காரனின் நிலைக்குச் சமமானது.

நியாயத்தை, அன்பை, அருளைப் போதிக்கவே கடவுள் நம்பிகையும், சமயச் சார்பும் தேவைப்படுகின்றன. வாழ்க்கைக்குத் தேவையுள்ள பொருள்களான உணவு உடை உறையுள் போன்றவற்றை முயற்சியால் பெறுவது போலவே, இம்மைக்கும் மறுமைக்கும் முக்கியமாக வேண்டப்படும் கடவுள் அருளை முயன்று பெறவேண்டும். அருள் வெள்ளத்தால் அகத்தூய்மை உண்டாகும். சிலரது மனங்களிலே சிங்கம், புலி, கரடி போன்றவைகள் வாழ்கின்றன. அவைகளை விரட்டி, ஆண்டவனின் அருள் வெள்ளம் பெருக்க வேண்டும். புறத்தூய்மைக்கு, பொருள் இன்றியமையாததுபோல அகத்தூய்மைக்கு அருள் இன்றியமையாதது இதனை நாம் கருத்தில் கொண்டு கடவுளை வழிபடும் மனப்பழக்கத்தினை உண்டாக்கவேண்டும்.

கடவுளை எப்படி வணங்குவது? இது ஒரு பிரச்சனை. வழிபாட்டிற்குச் சிந்தனைதேவை. சிந்தனையை ஒரு நிலைப்படுத்த ஒரு சாதனம் வேண்டும். அச்சாதனமே தெய்வ உருவங்கள். உருவ வருபாட்டின் சிறப்பால் உள்ளூறு சோதியைக் காண

முடியும். தெய்வ உருவங்கள் கற்களிலே செதுக்கப்படு கின்றன. கல்லைக் கலையாக்கி கலையில் கடவுளைக்கண்டு வணங்கி யவர்கள் நாம். நான் பேசிக்கொண்டிருப்பதைப் பெரிதாக்கி உங்கள் காதுகளில் செலுத்துகிறதே இந்த ஒலி பெருக்கி, இதன் ஆரம்ப நிலை வெறும் இரும்புதான். வெறும் இரும்பு தட்டி நிமிர்த்திப் பயனுள்ளதாக்கப் பட்டிருக்கிறது. அது போல் வெறும் கல், சிற்பியின் சிந்தனைச் சிறப்பாலும்-கற்பனை வளத்தாலும்-கலைத்துடிப்பாலும் கடவுட்கோலம் எடுத்திருக் கிறது. கடவுள் உருவங்களைக் கடவுளாக எண்ணும்நிலை வளர வேண்டும்.)

செவிடனுக்குக் காது கேட்பதில்லை. அதைப்போல் நெஞ்சம் செவிடாக இருப்பவனுக்கு இறைப்பற்று ஏற்படுவ தில்லை. நெஞ்சச் செவிடுநீங்க நெஞ்சத்தால் விரிந்தவர்கள் உதவவேண்டும்.

இறைவனை வழிபடும் முறையிலே உயிர்ப்பலி மிகவும் கொடுமையானது. உயிர்ப்பலியை ஆண்டவன் விரும்புவதாக எண்ணக்கூடாது. தனது உயிர்களை வருத்தி அழிக்க ஆண்டவன் விரும்புவதில்லை. சிலர் இறைப்பற்று என்றுகூறி, ஆடு, கோழிகளைப் பலியிடுகிறார்கள். அது தவறு. இத்தகைய பாதகச் செயல் பரமன் சந்நிதானத்தில் நடவாது தடுக்கப்பட வேண்டும். பாரம்பரியமாக இருந்துவந்த வழக்கம் என்பதால் உயிர்ப்பலியைத் தடுக்கச் சிலர் மறுக்கிறார்கள். அறிவு விரியாத அந்தக்காலத்து விவகாரங்கள் அனைத்தும் அறிவு விரிந்த-நாக ரிகம் வளர்ந்த இந்தக் காலத்தில் நடைபெறுவது நல்லதல்ல.

நமது காலிலே ஒரு ஆணி குத்தினால் ''ஆ!'' என்று அலறித் துடிக்கிறோம்! ஆட்டை வெட்டும் பொழுது அது என்ன பாடு படும். ஆன்மாக்களுக்கு அருள்சுரக்கும் ஆண்டவன் அதைப் பொறுப்பானா?

எனவே, மனித வாழ்வின் குறிக்கோள் உணர்ந்து ஆன்ம சுத்தியுடன் அருளியல் வாழ்வு வாழ்ந்து பயனடைய முன்வரவேண்டும். இந்தப் பிறவி என்னும் பெருங்கடலைக் கடக்க, கருணைக்கடலான, இறைவனின் 'தாள்' என்னும் தெப்பத்தில் ஏறிக்கொள்ளவேண்டும். ''பிறவிப் பெருங் கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்'' என்கிறார் வள்ளுவர்.

உருவங்களைக் கடவுளாகவே கருதி வழிபடவேண்டும். இறைவனிடம் உள்ளம் ஒன்றி நிற்க, கடவுளைக்காட்டும் உருவம் உண்மையான கடவுளாகக் காணப்படும். கடவுட் கொள்கை உயிர்ப் பலியை வெறுக்கிறது. எல்லா உயிர் களுக்கும் தந்தையான மங்கைபங்கன் சில உயிர்களை வதைத்துப் பலியிடுதலைப் பொறுக்கமாட்டான். பலியிடும் பழக்கம் ஒழிந்து மறையச் சைவ உலகம் தீவிரமாக முனைதல் வேண்டும் என்று கூறி வாழ்த்தி விடைபெறுகிறோம்.

# மணிபல்லவத்தில் (நயினாதீவு)

இன்று அறிவியலார் மின்னல் வேகத்தில் முன்னேறிச் செல்கிறார்கள். புதியன கண்டு - அதற்கு அளவுகடந்த வரவேற்பளிக்கின்றார்கள். பழமையை வெறுக்கின்றார்கள். இன்றைய உலகம், புதுமையுமற்று - பழமையுமற்று இரண்டுங் கெட்ட நிலையிலே நிற்கிறது. மேலை நாட்டில் புதியன வளர்ந்து வருகின்றன. ஐன்ஸ்டீன் கருத்து பைபிளை விலக்கிச் செல்கின்றது. பைபிள் புதியவற்றிற்கு மாறுபட்டபோதும் உயிர் வாழ்கின்றது; அதன் பழமை பாராட்டப்படுகின்றது. நம்மவர் புதியன கண்டு நமது பழைய சமையச்செய்திகளை நையாண்டி செய்கின்றார்கள். நம்மிடையே பழமை வளரவில்லை - சடங்குகளே வளர்கின்றன. அவற்றின் பலன் நம்மைக் கிட்டுவதில்லை. முள் நகராத மணிப்பொறிபோலச் சமயச் சடங்குகள் நடைபெறுகின்றன. பெண்டுலம் ஆடினாலன்றோ முள் நகரும். நெஞ்சைத் தொட்டாலன்றோ சமயச்சடங்குகளால் பலன் விளையும். ஆலயமணிகள் நெஞ்சை அசைத்துவிடவேண்டும். சோற்றால் செங்குருதியை ஆக்குவதுபோலக் கோயில் சடங்குகளால் இளைஞர் உள்ளங்களை அசைத்துவிடவேண்டும். பொருளாதார மேடுபள்ளங்கள் சமயத்தை வெறுக்கச் செய்கின்றன. சமயம் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு ஆலயங்களிலே சிறைப்பட்டுக் கிடக்கின்றது. பொருள்வளங் கொழிக்கும் நாடுகள் புண்ணிய பூமிகளா? அங்குப்பிறந்திருப்போர் அத்துணை பேரும் புண்ணியவான்களா? அங்குள்ள மக்கள் மற்றவர்களின் அல்லலைப் போக்கிப் பொருளாதாரத்தைச் சமப்படுத்தலைக் கண்ணாரக் காண்கின்றோம்.

சட்டம் புறத்தே நடைமுறையைச் சீர்ப்படுத்த உதவுமேயன்றி மனத்தை மாற்றாது. சட்டத்தால் மனத்தை மாற்ற இயலாது. நீதியாலேதான் மனமாற்றத்தைச் செய்யமுடியும்.

சமய வாழ்வுபெற்று, இல்லார்க்கு இரங்கித் தொண்டு புரிந்து வாழ்ந்தால் இம்மையே சோறும் கூறையும் பெறலாம். கோயிலிலே அன்பின் அடிப்படையில் சடங்குகள் நடந்து உள்ளங்களைத் தொடவேண்டும். ஆண்டவனின் திருக்கோலக் காட்சியைக்கண்டு கசிந்து கண்ணீர் மல்கவேண்டும். இவ்வாறு ஆலயங்களில்லாவிடில் அவற்றை விட்டு, உள்ளம் கவரும் கடலையும் - மலையையும் கைதொழுவோம். ''மூரி முழங்கொலி நீராஞன் கண்டாய்'' என அப்பரடிகள் தேவாரம் இதற்கு வழி வகுத்துத் தருகிறது.

எறும்பு, ஈ, யானை, எந்தஆகமப்படிபூசைபுரிந்தன. வழிபாடு நமக்காகவே நடைபெறுகின்றது நாம் உய்தி பெறவே இறை வழிபாடு எழுந்தது. ''வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்'' என மணிவாசகர் இதனை வற்புறுத்துகிறார். காற்றை நாம் சுவாசிப்பதனால் காற்றுக்கு என்னபயன்? நாம் தான் பயன் பெறுகிறோம்? சோற்றை நாம் உண்பதால் சோற்றுக்கு என்னபயன்? நாம் தான் பயனடைகிறோம். இவற்றைப்போலவே கடவுளை வணங்குவதால் நாமே பயன் பெறுகின்றோம். உயர்ந்த எண்ணத்தால்வரும் பரம்பரையே குலமாகும். இக்குலத்தை நாம் விரும்புகின்றோம். அதைக் கூட உயர் நிலைப்பட்டோர் கை விடுவர். ஆதலால் எண்ணம் உயர்ந்ததாகவும் தூயதாகவும் இருப்பதற்குக் கடவுள் வழிச் செல்லல் இன்றியமையாதது.

மனிதகுலம் சுதந்திரமாகச் சுற்றிச் சுழன்று திரிய ஆசைப் படுவதில் வியப்பில்லை. எல்லா இனத்தவருடனும் இணைந்து - பிணைந்து வாழ்வதிலும், உரையாடுவதிலும் உவகை கொள் கிறது மனித இனம். இந்தச் சுதந்திர நோக்குக்கும் முட்டுக் கட்டையாக - தடையாக எது குறுக்கிடுகிறதோ அதை அகற்றி அழிக்கவேண்டுமென்ற வேட்கை உண்டாகின்றது. மனித மேம்பாட்டுக்கும், சமுதாய உயர்வுக்கும் உகந்த சில கருத்துக் களையும் நடை முறைகளையும் யாராவது தடுத்தார்களானல் அத்தடையை நீக்க முயற்சிப்பது தன் கடமையென மனிதன் காலப்போக்கில் உணர்ந்து வந்திருக்கிறான். அத்தகைய உணர்ச்சியின் உந்தல்தான் சுதந்திரப் பற்றை அவனுக்குக் கொடுத்திருக்கிறது. தமிழினம் சுதந்திரத்தைப் பேணிக் காப்பதில் முன்னின்று உழைத்திருக்கிறது. விரிந்த - விசால

மான மனப்பான்மை தமிழினத்துக்கு இருந்தது போலவே-சுதந்திரம் காக்கும் உணர்வும் இருந்தது. நீங்கள் வாழும் ஊர் எவ்விடத்திலுள்ளது? என்று அன்று கேட்டால் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பதில்தான்வரும். அவ்வளவு தூரத் துக்கு அகன்ற நெஞ்சு அப்போதிருந்தது. தன்னைப்போல் பிறரை நேசித்து, தன் நாட்டைப்போலப் பிறநாட்டையும் எண்ணி எல்லாரும் ஒரு குலம் எல்லாரும் ஓர் இனம் என்ற படி வாழ்தல்தான் தலையாய வாழ்வு என்று கருதியவர்கள் அன்றையத் தமிழர்கள்.

அன்றையத் தமிழர் பெரியோரைப் பேணினர்-சுற்றத்தைத் தழுவினர்-இரந்தவர்க்கு ஈந்தனர்-இன்னல் கண்டவிடத்து இரங் கினர். எல்லவாற்றுக்கும் சிகரமாகத் தமக்கு மேலான சக்திக்கு மதிப்பளித்து மதச்சார்புடைய மகிழ்ச்சி வாழ்வு வாழ்ந்தனர். கடவுள் நம்பிக்கையும், மதச்சார்ப்பும் மனிதனுக்கு இன்றியமை யாதனவென்று கருதி வாழ்ந்தனர். உள்ளத்தூய்மைக்கும், உயர்ந்தவாழ்வுக்கும் உவகைநிலைக்கும் உள்ளுறுசோதியை, உள் ளம் விட்டு ஒரடி நீங்கா ஒருவனை நம்பினர். நலம் பெற்றனர். யாருக்கும் அஞ்சாத நெஞ்சுரம், மதத்தைச் சார்ந்த மக்களுக்கு இருந்தது. தலைபோகின்ற நிலைவந்தாலும் கடவுளைத் தவிர வேறெவர்க்கும் தலைகுனியாத தருக்கு அப்போதிருந்தது. நாங் கள் எவருக்கும் குடிமக்களல்லர். எங்களை எமனும் எதுவும் செய்துவிடமுடியாது; நரகத்துக்கு நாம் செல்லப்போவதில்லை. எந்தத் துன்பமும் மக்களை எட்டிப் பாராது. இதனாலே நாம் இன்புற்றுச் செம்மாந்து உலவுவோம்; பிணி துன்பம் இல்லாத பேரின்பவாழ்வு எங்களுடையது. நாங்கள் ஒரேயொருவருக் குத்தான் பணிந்தவர்கள். அவரும்தமக்குமேலாக யாராவது ஒரு வரை வைத்திருப்பவரல்லர்-அவர் எவருக்கும் குடிமகன் அல் லர்; அவருக்கே எமது பணிவு என்றுமுண்டு என்றார் அப்பரடி கள். ''நாமார்க்கும் குடியல்லோம் ..-'' என்பதே அத் திருப் பாடல்.

அப்பரது சுதந்திர தாகமும் உரிமை மனப்பான்மை யும் ஓர்ந்து உணரத்தக்கவை. சுதந்திர தாகத்தை அப்பர் வெளிப்படுத்திய முறையினை நாம் மறந்துவிடலாகாது. அப்பரடிகளின் அசைக்கமுடியாத கடவுள் நம்பிக்கைதான் பல் லவ மன்னனின் கட்டளையைத் துச்சமென எண்ண வைத்தது.

கடவுள் நம்பிக்கையுடைய சமயசீலர்கள் எதற்கும் பயந்து விடுவதில்லை. அவர்களின் சமயச்சார்புடைய வாழ்வு அவர்களை அல்லலுக்குள் ஆழ்த்துவதுமில்லை என்பதை அப்பர் திருவாக்கால் நாமறிகிறோம். சுதந்திர உணர்ச்சிக்கு வித்தூன்றிய முதல் வித்தகரே அப்பரடிகள்தான். அவரை அடியொற்றித்தான் ஏனைய கவிஞர்கள் சுதந்திர உணர்ச்சிக்குக் கவிதையால் உதவினார்கள். நமது தலைமுறையிற்றோன்றிய பாரதிகூட அப்பரது அடிச்சுவட்டைப் பின்பற்றியமை பாராட்டி மகிழத்தக்கது.

''பூமியில் எவர்க்குமினி யடிமைசெய்யோம், பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்'' என்று பாடியமை பாரதியின் புலமை வெளிப்பாட்டைக் காட்டுவதோடு அப்பரடிகளின் அருட்பாடலையும் நினைவூட்டி நிற்கிறது.

ஓரினமாக ஒன்றி வாழ்ந்த வாழ்வில் எப்படியோ சாதிமுறை நுழைந்து விட்டது. இச் சாதீய நுழைவு சிலர் வாழவும், பலர் வீழவும், சிலர் பெருக்கவும், பலர் வாடவும், சிலர் சிரிக்கவும், பலர் அழவும் உதவி செய்தது. தெளிவாகச் சொன்னால் சிலருடைய வளமான வாழ்வுக்குச் சாதி உறுதுணையாய்-ஊன்றுகோலாய் உதவியது. பிரித்து வைத்து இன்பம் கண்டவர்களும், தள்ளிவைத்துச் சுகம் அனுபவித்தவர்களும் சாதீய நெருப்புக்கு நெய்வார்த்தவர்கள். இந்தச் சாதீய நெருப்பானது சமயத்தின் தலையாய தத்துவங்களையும் மாசு படுத்திவிட்டது. நமது சைவசமயத்தின் கொள்கைகளும், கோட்பாடுகளும் இச்சாதீய நெருப்பால் தகிக்கப்பட்டுவிட்டன. ஆண்டவனின் குழந்தைகள் ஆண்டவனின் விருப்பத்திற்கு விரோதமாகத் தள்ளியும், விலக்கியும் வைக்கப்பட்டார்கள். இதனால் நமது சமயத்திற்குத் தளர்ச்சியும், வீழ்ச்சியும் வரலாயின. இவற்றையெல்லாம் நல்லபடி சீராக்கி உயர்ந்ததொரு தொண்டினை உருவாக்குதல் சைவ உலகத்தினர் கடன் எனக்காட்டி-வாழ்த்தி-விடைபெற ஆசைப்படுகின்றோம்.

# நீர் கொழும்பில்

உயிரினம் இன்பத்தை நாடி ஏங்குகிறது. பெறும் சிற்றின் பங்களை அனுபவித்து இன்பப்படுவதில் நிறைவு பெறுகின்றது. இன்பம் என்று கருதி அனுபவிக்கும் சிலவற்றால் துன்பம் நேரிடுவதுமுண்டு. எதிர்வரும் துன்பத்தைப்பற்றி எண்ணிப்பார்க்க உயிரினங்கள் நினைப்பதில்லை. எண்ணாமல் செயல் நடைபெறுகின்றது. சிற்றின்ப வேட்கை பெருந்துயரில் கொண்டுபோய் நிறுத்துகின்றது. மனிதன் மற்றெல்லா உயிரினங்களிலும் பார்க்க உயர்ந்தவனாக மதிக்கப்படுகிறான். உடைமையைப் பொறுத்தே உணர்ச்சியுள்ளது. பணப் பெருக்குடையவர்களும், கல்விச் சிறப்புடையவர்களும் செல்வாக்குச் சிறப்புடையவர்களும் பதவியுயர்வுடையவர்களும் உயர்த்திப் பேசப்படுவதை நாம் உலகியலில் காணமுடிகிறது.

பொதுவாக-மனித இனம் சிறப்பாக மதிக்கப்படுவதற்கு அதன் சிந்தனா சக்திதான் காரணம். பகுத்தறிந்து, பண்புடன் வாழத் தெரிந்த இனம் மனித இனம். தீயதை விலக்கி நல்லதை நாடி, அறத்தைப் போற்றி, மறத்தைக் கடிந்து, அன்பை நாடி, வன்பை அழித்து, அறிவைப் பேணி மடமையை ஒழித்து-துன்பம் நீக்கி-இன்பமளித்து வாழ மனிதனுக்கு நெறிகாட்டுவது அவனது சிந்தனைச் சிறப்புத்தான்.

சிந்தனைச் சிறப்புமிக்க மனிதகுலத்தில் பண்டு முதலே கற்றோரும், மற்றோரும் போற்றுமளவுக்கு வாழ்ந்து, வாழ்க்கை நெறிகண்ட இனம் நமது தமிழினம். மனிதன் கண்டகண்டபடி புலனைச் செலுத்திச் சீரழிந்து கொண்டிருந்த காலத்தில் வாழ்வைப் பற்றிச் சிந்தித்துச் சிறப்பு மிகுந்த தத்துவங்களை வாரி வழங்கிய இனம் தமிழினம். காலத்தாலும் கருத்தாலும் மூத்த உலக வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் புனிதமான ஒருநிலையைப்பெற்ற பெரும்பேறு நமக்கு உண்டு.

ஆனால் இத்தகு தகைமையை நினைந்து நினைந்து இறும்பூ தடைவதில் காலத்தைப் போக்கியதாலேதான் இன்றுள்ள இழிநிலை நமக்கு வந்துள்ளது. முந்தையத் தமிழன் வாழ்க் கையைப் பற்றிச் சிந்தித்தான்; இன்றுள்ள நாம் வாழச் சிந்திக் கின்றோம், எப்படியாவது வாழ்ந்து இந்த வாழ்க்கையை முடித்து விடுவோம் என்று நினைக்கிறோமே தவிர எப்படி வாழ வேண்டும் என்று நினைக்கின்றோமில்லை. குறிக்கோள்களோ டும், கொள்கைகளோடும் வாழ்வை வரையறுத்து வையத் துள் வாழ்வாங்கு வாழ எண்ணுகிறோம் இல்லை. இவ்வாறு எண்ணிய இனத்தின் வழித்தோன்றல்கள்-எப்படியாவது வாழ' எண்ணுதுவாழ முனைவது வருத்தத்தைத் தருகிறது. எண்ணிச் சிந்தித்து வாழும் சமுதாயத்தை உருவாக்க நாம் அவாவுற வேண்டும். நமது மொழிவழி வந்த நாகரிகத்தைப் பேணிக் காக்க நாம் விரும்புதல் வரவேண்டும். பேரின்ப நிலைபெற உழைக்கும் உயர்ந்த உள்ளங்களை உருவாக்க வேண்டும். எங் கும் எல்லா உயிர்களிடத்தும் எப்போதும் அன்பு செலுத்தி, அறத்தால் வருவதே இன்பம் என்று கருதி அருள் வாழ்வு வாழவேண்டும்.

எங்கும் அன்பைச் செலுத்த மனத்திற்குப் பக்குவம் வேண் டும். மனோபக்குவம் இல்லாது அன்பைச் செலுத்துவதென் பது முடியாத காரியம். அப்படி அன்பு செலுத்துவதாக இருந் தாலும் அது வெறும் நடிப்பாகவே முடியும். நிறைந்த நடிப்பு வாழ்க்கை வாழ்வதிலும் குறைந்த நல்ல வாழ்க்கை வாழ்வது சிறப்பு. மனத்தைப் பக்குவப்படுத்துவதற்கு மனத்தில் உள்ள குழப்பங்கள் குறையவேண்டும். சினம் பொறாமை பொச் சரிப்பு சந்தேகம் சபலம் முதலியன நீங்கத் தொடங்கினால் மனோபக்குவத்திற்கு வேண்டிய அடித்தளம் அரும்ப ஆரம்பிக் கும். மனோபக்குவ அடித்தளத்தைப் பெற ஒரேயொருவழி தான் உண்டு. அதுவே வழிபாடு. வழிபாடு மனத்தை நல்வழியில் ஆற்றுப்படுத்த எழுந்த சாதனம். இலட்சியமற்று இங்குமங் கும் அலைந்தலைந்து அல்லலுறும் ஆன்மாவை உருக்கிக் கசிய வைத்து நன்னெறிப்பட வைக்கும் பேராற்றல் வழி பாட்டிற் குண்டு.

இறைவழிபாடு இன்பங்கள் எல்லாவற்றிற்கும் மேலான இன்பத்தை-பேரின்பத்தை நல்குகின்றது. கவலை தோய்ந்த

கருத்தைக் களிப்படைய வைக்கிறது. பைத்திய நிலையைப் பக்குவப்படுத்திப் பயனடையச் செய்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக சிரித்து வாழவும், கொடுத்து மகிழவும் போதிக்கிறது. சிரிப்பதற்காக மனிதன் பலதுறைகளை நாடியோடித் திரிகிறான். நாடகத்திலும் திரைப்படத்திலும் கால் கடுக்க நின்று ஒன்றேகால் ரூபாய்க்கு டிக்கட் வாங்கிச் சிரிப்பை அனுபவிக்கிறான். சினிமாவிலே டணால் தங்கவேலுவின், சிரிப்பை - இராதாவின் சிரிப்பைக் கண்டு ஆனந்திக்க மழையிலும் வெய்யிலிலும் நின்று உழல்பவர்கள் எத்தனைபேர்! காசில்லாமல்,செலவில்லாமல் கருத்தைக் கனிய வைத்துச் சிரிப்பிலாழ்த்திப் பேரின்பத்தை நல்கும் வழிபாட்டு நெறியினைப் பின்பற்ற மனிதராகிய நாம் நினைக்கவேண்டும்.

உலகியலிலே சிரிப்பதற்கு எவ்வளவோ நிகழ்ச்சிகள் உண்டு. நாள்தோறும் நடைபெறும் சம்பவங்கள் நம்மைக் கைகொட்டி நகையாட வைக்கின்றன. நம்மிற்சிலர் உலகத்தைப் பார்த்துச் சிரிக்கத் தெரியாதிருக்கிறோம். தலைசிறந்த தத்துவப்பேராசிரியர்கள் உலக வாழ்க்கையிலிருந்தே சிரிப்புக்கிடமானவைகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் காட்டிய சிரிப்புக் கிடமான நிகழ்ச்சிகள் சிந்தனைக்கும் விருந்தளிக்கின்றன. வாழ்வைப் பார்த்து- வாழ்க்கையைப் பார்த்துச் சிந்தித்த வள்ளுவப் பெருந்தகை ஒரு தத்துவக்குயில். அவரொரு நிகழ்ச்சியை நமக்குக் காட்டி நம்மைச் சிரிக்கவும் சிந்திக்கவும் செய்வதைப் பாருங்கள்.

ஒரு கடை வீதியிலே ஒருவன் நடந்து சென்று கொண்டிருக்கிறான். தேநீர்கடை ஒன்று குறுக்கிடுகிறது. வைத்திருந்த பணத்துக்கு ஏதோ பலகாரம் வாங்குகிறான். வழிநெடுக அதைக் கொறித்துத் தின்றுகொண்டே போகிறான். இடையிலே வள்ளுவர் எதிர்ப்படுகிறார். அவர் அவனை மறித்து ''தம்பி! உனக்கு உயிர் இருக்கிறதா?'' என்று கேட்டார். அவன் திகைத்து-வெலவெலத்து-வேர்த்துக் கொட்ட விழித்தபடி நின்றான். சற்று நேரம் பொறுத்து ''என்ன ஐயா கேள்வி இது? நான் நடக்கிறேன், மூச்சு விடுகிறேன், முறுக்குத் தின்கிறேன், என்னைப்பார்த்து-உனக்கு உயிர் உண்டா? என்று கேட்கிறீர்களே'' என்றான். ''சரியப்பா நீ அந்தக் கடையிலே,

முறுக்கு வாங்கியபொழுது, இரண்டு வேளையாகச் சாப்பிடாமல் வாடி வதங்கிய நிலையில் நின்றானே ஒரு ஏழை! நின்ற தோடல்லாமல் பசிக்கிறது என்றும் கெஞ்சிக் கேட்டானே; நீ வைத்திருந்த முறுக்கில் பாதித் துண்டையாவது கொடுத்திருக்கக் கூடாதா? நீ அப்படிக் கொடுக்காது வந்ததுதான் என்னைச் சந்தேகிக்க வைத்தது" என்றார் வள்ளுவர். இதிலுள்ள நகைச் சுவையையும் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பையும் நாம் நினைத்து நினைத்துச் சிரிப்பதோடு சிந்திக்கவும் வேண்டும்.

நமது சிந்தனை அருளார்ந்த சிந்தனையாக - அன்புவழிச் சிந்தனையாக மிளிரவேண்டும். அப்பொழுது தான் நமது அகத்திலேயுள்ள ஆத்திரம் கொதிப்புப் போன்றவை அடங்கி-ஆன்மீக வாழ்வுபெற வழி ஏற்படும். அகத்தின் ஆத்திரமும், பொறாமை, எரிச்சல் போன்ற தீய உணர்வுகளும் களையப்படவேண்டும். உலையிலே வெந்து கொண்டிருக்கும் அரிசி பொங்கினால், ஒரு கரண்டி மூலம் இண்டிக் கிளறி விட்டால் அவ்வரிசி நன்றாக நின்று வேகும். இன்றேல் அரிசி வேக உதவும் நீர் வெளியாவதோடு, சோறாக உதவிய நெருப்பையும் அவித்து விடும். அதே போல மனிதனின் ஆத்திர உணர்ச்சி பொங்கி வராதபடி தடுக்கப்படல் வேண்டும். இன்றேல் ஆத்திரத்தால் அறிவு மங்க-செயலாற்றத் தகுந்த ஆற்றலும் அழிந்து-காரிய சாதனைக்குரிய அடிப்படைச் சூழலும் கெட்டு விடும்.

ஆகவே! இனங்களில் உயர்ந்து சிறந்து போற்றுதலுக்குள்ளாகியிருக்கும் மனித இனம் எண்ணிச் சிந்தித்து அருளார்ந்த வாழ்வுவாழ வேட்கை கொள்ளவேண்டும். அன்பு வாழ்வுக்கும் அறவாழ்வுக்கும் வழிவகுத்துத்தர வழிபாடு சாலச் சிறந்தது. வழிபாட்டின் மூலம் அமைதியையும் பேரின்பப் பேற்றையும் பெற்று மனிதரில் மாணிக்கங்களாகத் திகழ முடியும். உலக உத்தமர் காந்தியடிகள்கூட வழிபாட்டினாலும் வழிபாட்டை ஒட்டிய சிந்தனைகளினாலும் சிறப்புற்றார்.

உலகியலில் சிந்தனைக்கு வித்திடக் கூடிய சிரிப்புகளை அனுபவித்து ஆன்ம நேயத் தொண்டுகளைச் செய்ய முனைய

வேண்டும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பு நம் தமிழினத்துக்குப் பழமையானது. அது தொன்றுதொட்டு வழி வழி வந்த ஒரு தன்னிகரற்ற தத்துவம். அந்தத் தத்துவத்துக்கு மதிப்பளித்து, என்றும் அன்பாய் இன்பமாய் வாழ வாழ்த்தி விடைபெறுகிறோம். வணக்கம்.

# யாழ்ப்பாணத்தில்

சமய வரலாறுகளைப் பலர் பலவிதமாகப் பார்க்கிறார்கள். வாழ்வுக்கு நெறியைக் காட்ட வேண்டிய சமய அமைப்புகள் தளர்ந்ததாலும், சோம்பியதாலும் ஒரு வித மயக்கம் உண்டாகி யிருக்கிறது. (ஆண்டவன் அருள் பாடும் இன்றைய ஆத்திகர் கள் சிலரிடமிருந்து சமயத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டம் வந்திருக்கிறது.) சமயத்தைப் பற்றிய ஐயப்பாடு நமது சமு தாயத்தில் எப்படி எழுந்தது என்பதைச் சிந்திக்க வேண்டும். சமயச் சார்புடைய புராணங்கள் எத்தகைய நோக்கத்தோடு தோன்றின என்பதையும் எண்ண வேண்டும். இத்தகைய சிந்தனைகளினாலும், எண்ணங்களினாலும் முடிவான கருத் தொன்று பிறக்க வழியுண்டு. அந்த முடிவான கருத்தின் வழி சமயச் சார்புடைய சமுதாயத்தைப் படைக்க உழைக்க வேண்டும்.

(சமுதாயப் பசியை, நாட்டுச் சிக்கல்களை எண்ணியபடியே புராணங்களை அணுக வேண்டும். நாம் பெரிய புராணத்தை அத்தகைய எண்ணங்களோடுதான் பார்க்கிறோம். பெரிய புராண அடிகளை ஆழச் சிந்தித்தால் மனித விடுதலைப் போராட்டம் நன்கு புலனாகும்; மண்ணகத்தை விண்ணக மாக்க எழுந்த காவியமே திருத்தொண்டர் புராணம். அரசியல் வரலாற்றையும், சமுதாய வரலாற்றையும் நாம் அதில் காண முடிகிறது. மனிதவாழ்வின் எல்லாத்துறைகளையும், அலசி ஆராய்ந்து செய்திகளை வெளியிட்ட வாழ்வு நூல் பெரிய புராணம். பெருமான், அர்ச்சனை பூசைகளை ஏற்றுக் கொண் டிருப்பவர் அல்லர். அவர் அடியார்க்கு வேலையாளானவர்- தூதுவரானவர். இரவோடு இரவாகத் தன்தோழனுக்காக ஒரு பெண்ணிடம் தூதுசென்றிருக்கிறார். இத்தகைய செய்திகள்

பெரிய புராணம் வாழ்க்கையை ஒட்டியது-வாழ்வோடு பிணைந்தது என்பதைக் காட்டி நிற்கின்றன.

மனித இனத்தை வறுமையினின்றும் மீட்டு ஈடிலா இன்ப வாழ்வு வாழ வழிகாட்ட வேண்டுமென்ற ஒப்பில்லா உயர்ந்த எண்ணத்தைப் பெரிய புராணம் தருகின்றது. ''வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பி'' என்கின்றது சித்தியார். வறுமை வாழ்வைச் சிதைத்து மாற்றம் செய்கின்றது. வறுமையால் வரும் சிறுமையை விலக்க வேண்டும். மன்றுளார் அடியார் வரலாறான பெரிய புராணம் உணர்ச்சி, குரோதம், ஆத்திரம் போன்றவைகளை விலக்கி விட்டுப் படிக்க வேண்டிய ஒரு தெய்வ நூல். செழுமையான நிலத்தில்தான் பயிர் நன்றாகச் செழித்து வளரும்; உள்ளத்தின் செழுமையில் தான் உண்மைத் தத்துவங்களின் வளர்ச்சி தங்கிக் கிடக்கின்றது.

மன்றுளார் அடியார் பொது மக்களுக்கு உரியவர்கள்; பொது வாழ்வைப் பற்றிச் சிந்தித்தவர்கள்; எப்பொழுதும் எம்பெருமானை எண்ணியபடி எவர்க்கும் இன்னல் களைபவர்கள்; மன்றத்து மக்களுக்கு மகிழ்ச்சி கொடுக்கவே தாங்கள் பிறந்திருப்பதாக எண்ணிச் செயல்பட்டவர்கள். இறைவனின் திருவடிகளே செல்வம் எண்றெண்ணி வாழ்ந்தவர்கள். கேடும் ஆக்கமும் கெட்ட திருவினால் அவர்கள் நன்மையையும் தீமையையும் ஒன்றாகவே-ஒரே தன்மை உடையனவாகவே கருதினார்கள்; ஓட்டையும் செம்பொன்னையும் ஒக்கவே நோக்கினார்கள்; வீடும் வேண்டாது, கூடும் அன்பினிற் கும்பிடுதலாகிய ஒரு செயல் கிடைத்தால் போதுமானது என்று அவர்களது நெஞ்சங்கள் ஏங்கின! ஆனந்த நடனமாடும் ஆண்டவனது குனித்த புருவத்தையும் பனித்த சடையையும் பவளமேனியையும் அம்மேனியில் திருநீறு அணிந்த காட்சியையும் பாதம் தூக்கி ஆடும் அற்புத அழகையும் காணவே-மானிடப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்றார்கள். ! இறைவனை எட்டத்தில் வைத்து ஏதோ வாழ்வோடு பிணைப்பில்லாத வாழ்த்துப் பொருளாக்கி கோவில்களிலும் குருக்கள்மாரின் சமீபத்திலும்தான் கடவுளை வணங்க வேண்டுமென்று கருதுகிற சமுதாயத்துக்கு நல்லதொரு விருப்புணர்வை நமது நாயன்

மார்கள் கொடுக்கிறார்கள்.] பொன்னும் மெய்ப்பொருளும் தந்து போகமும் திருவும் புணர்ப்பவராக நமது கடவுள் இருக்கிறார் என்ற எண்ணம் நம்மவர்களிடையே தோன்ற மன்றுளார் அடியார் பாடுபட்டுழைத்தார்கள். அவர்களது வாழ்க்கை முறையிலேயே-தொண்டு தெய்வத் தன்மை வாய்ந்தது என்றும்-தொண்டலாது உயிர்க்கு ஊதியம் இல்லை என்றும் நாம் அறியக்கூடியதாயிருக்கின்றன.

தமிழர் வாழ்வு இசையோடு இணைந்தது. ஏழிசையாக-அவ்விசைகளின் பயனாக இறைவனைக் கண்டவர்கள் தமிழர்கள். இயற்கையை வருணித்து அதன்வழி ஆண்டவனைக் கண்டு வணங்கிய இனமும் தமிழினந்தான். இத்தகைய தமிழர் நிலை சமணர்களது குறுக்கீட்டால் பிறழக் கூடாதெனக் கருதியே, ஞானசம்பந்தர் தமிழர் நாகரிகம் காக்கப் புறப்பட்டார். தமிழர் நாகரிகம் பேணப்படவேண்டியே சம்பந்தர் சமணர்களோடு வாதிட்டார்-வென்றார். இந்த வாதத்தை சமயச் சண்டையாக எண்ணி விடுதல் தகராறு. சண்டைவேறு-பாதுகாக்க எடுக்கும் முயற்சி வேறு.

இயற்கையோடியந்த வாழ்வைத் தொல்காப்பியம் கூறுகின்றது. -தமிழர்கள் வாழ்வு இயற்கையோடியந்தது. இந்த இயற்கை வாழ்வைச் சமணர்கள் மாற்றியமைக்க எத்தனித்தனர். அப்போதுதான் அப்பரும் சம்பந்தரும் ஒரு நிலைமை மாற்றத்தைக் கொணர விழைந்தனர். பண்ணோடு இசை கேளாத சமணர்களின் போக்கை மாற்றியமைக்கும் பொறுப்பு சம்பந்தருக்குக் கிடைத்தது. சமணர்கள் மலரிடை மணம் நுகரார் என்றனர். அப்பரும் சம்பந்தரும் இதற்கொரு மாற்றத்தைத் தேட வேண்டியிருந்தது. சம்பந்தர் தாம் பாடும் தேவாரங்களில் இயற்கையைப் பற்றி எடுத்தியம்பினார். மேல் நாட்டுக் கவிஞர்தான் இயற்கையை வர்ணித்துப் பாடல்கள் இயற்றியிருக்கிறார்கள் எனக் கருதுபவர்கள் சம்பந்தர் திருப்பாடல்களை ஒரு முறை படித்து இன்புறுவார்களாக.

சமண-புத்த சமயத்தவர்கள் பெண்மைக்கு மதிப்பளிக்காதவர்கள்-தெளிவாகச் சொன்னால் பெண்ணினத்தை வெறுத்தவர்கள். இந்நிலையிலேதான் ஞானசம்பந்தர் பெண்ணினத்தைப் போற்ற முற்பட்டு இறைவனைப் பெண்ணோடு தொடர்பு

படுத்திப் பாடினார். முதலில் பாடியருளிய தேவாரத்திலேயே "தோடுடைய செவியன்" எனப் பாடியிருக்கிறார். "பெண்ணினல்லாளொடும் பெருந்தகையிருந்ததே!" என்றார். மாதொரு பாகனாக நமது மகேஸ்வரனைக்காட்டிப் பெண்ணைப் பெருமைக்குரியவ ளாக்கினார், சம்பந்தர்.

சமுதாயம் கோவில்தொண்டைப் புறக்கணித்தபோது சேக்கிழார் கோவில்தொண்டை வலியுறுத்திப் பாடினார். மனையில் வாழ்ந்த மாதர்களைப் பாடினார். திருவருளை ஏற்று மனைவாழ்வு வாழ வேண்டுமென்பதைக் காட்டவே சுந்தரர் மனைவாழ்வை வாழ்ந்து காட்டினார். சமணத்தைத் தடுத்து தமிழ் நாகரிகத்தைக் காத்த மங்கையர்க் கரசியாரை மங்கையர்க்குத்தனியரசி எங்கள் குலதெய்வம் எனத் தொழுகிறார். வேறெவரையும் சேக்கிழார் பெருமான் தெய்வம் என விளம்பவில்லை. மங்கையர்க்கரசியையே கூறியுள்ளார். இவ்வாறாக மன்றுளார் அடியார் பெருமையினைப் பெரிய புராணம் பேசுகிறது. அன்று சமணர்கள் செயலைச் சம்பந்தர் தடுத்திராது போனால் இன்று நாமெல்லாமே கையில் கமண்டலம் ஏந்துபவர்களாய் இருந்திருப்போம்; நமது நாகரிகத்தைக் காப்பாற்றிய நல்லவர்களை நமது குலதெய்வங்களாக நாம் போற்ற வேண்டும்.

வேதம், ஆகமம் போன்றவற்றை ஆராய இப்பொழுது அவகாசம் இல்லை. காலவெள்ளம் ஓடுகிற ஓட்டத்தைப் பார்க்கிற பொழுது, நிம்மதியுடன் இருந்து நீண்ட நேரம் அவற்றை ஆராய முடியவில்லை. ஆதலால் நம் நாயன்மார்கள் காட்டும் வழிச் சென்று சிறப்புறுவோம்.

அன்பினாலே அம்மையப்பனை அணுகி அணைத்துக் கொள்வோம். கண்ணப்பர்கூட மோகமாய் ஓடிச் சென்று தழுவி மோந்து கொண்டார். சாக்கிய நாயனார் எறிந்த கல்லைக் கூட இறைவன் ஏற்று அருள்புரிந்தார். திருப்பனந்தாளிலே தடாதகைப்பிராட்டியார் கொண்டு சென்ற மாலையை இறைவன் குனிந்து ஏற்றுக்கொண்டார். குங்குலியக்கலயநாயனார் குங்குலியத்தூபம் போட்டார். இவைகளிலிருந்து அன்பின் நெகிழ்ச்சியே ஆண்டவனுக்கு வேண்டப்படுகிறது என்பதை

உணரமுடிகிறது. வழிபாட்டிற்குச்சாதி தடையாய் இருக்கக் கூடாது. பசித்தவன் சோறு பெற்று பசி நீங்கி மகிழ்ச்சி நிறைவு கொள்ளவேண்டும். அதுபோலவே கோவிலுக்கு வருகிறவர்களும் அருள் வெள்ளத்தைப் பருகி, ஆன்மதாகம் நீங்கி நிறைவுபெற வேண்டும். அதற்கு மொழிச் சுவரோ, இனச் சுவரோ, சாதிச்சுவரோ தடையாயிருக்கக் கூடாது. அப்பர் சுவாமிகள் கூட ''போதோடு நீர் சுமந்தேந்திப் புகுவார்; அவர் பின் புகுவேன்'' என்கின்றார். அங்கு சாதியைப்பற்றிய சாயலே இல்லை. சாதி, குலம், பிறப்பு என்னும் சழக்குகளை அறுத்தெறிந்து ஆண்டவன் சந்நிதானத்தில் எல்லோரும் சமம் என்ற உணர்வினை உண்டாக வேண்டும். அவ்வுணர்வினை உண்டாக்க சைவர்களாகிய நாம் சமுதாயத்தில் இறங்கி உழைக்க வேண்டும்.

நல்லனவற்றை நினைப்பதிலும் சொல்வதிலும் பார்க்க அவற்றை நடைமுறையில் கொண்டுவர முயற்சிப்பதே மேலானது; அகத்திலே உள்ள தூய்மையும், அன்புப் பெருக்குமே ஆண்டவன் வழிபாட்டிற்கு உகந்தன. இக்காலத்தில் புறத் தூய்மையோடு நிறைகொள்கிறார்கள். நீறு பூசி உருத்திராக்கம் தரிப்பவர்கள் சிலரின் பக்கத்தில் நெருங்கினால் துர்நாற்றம் அடிக்கிறது. அகத்திலே தூய்மை இல்லாது, அன்பு இல்லாது திருநீற்றின் வெண்மை போன்ற உள்ளமில்லாது புறத்தை மட்டும் அலங்கரிப்பதில் என்ன பயன்?

நமது சமயம் புனிதத்தோடு தொடர்புடையது. அகமும் புறமும் ஒரு சேரப் புனிதமடையாத தன்மையாலேதான் நமது சமயத்தவர் எண்ணிக்கை நாளடைவிற் குறைகிறது. காந்தத்தோடு கலந்திருக்கும் இரும்பும் காந்தமாகிறது. மின்சாரத்தைத் தொட்ட கம்பியிலே மின்சாரம் ஏறுகிறது. அதுபோலவே நாமும் இறைவனைத் தொட்டால், நினைத்தால் அவன் அருள் கிட்டும். இறைவன் உருத்தெரியாக் காலத்தே உட்புகுந்து மன்னி இருக்கின்றான். வண்டுகள் மொட்டை ஊதி மலர வைக்கின்றன. அதுபோலவே அடியார்களது இதய மொட்டுக்களை ஊதி மலர வைக்க வேண்டும். திருமடங்கள் அடியார்களது மனமொட்டுமலருமாறு ஊதவும் ஓதவும் வேண்டும். கோவில் என்ற தாய், ஆன்மா என்ற குழந்தைக்கும்

தெய்வ மணம் கமழச் செய்ய வேண்டும். வேலி பெரிதல்ல பயிர்தான் பெரிது; வரப்புப் பெரிதல்ல; பயிர் தான் பெரிது.

ஆகவே, ஆவியோடாக்கை, புரை புரை கனிய எம்பொரு மானை நாம் வழிபடவேண்டும். நாம் ஆண்டவனை நோக்கிக் கை தொழுதால் அவன் நமது தொழுகையை அறிந்து அருள் பாலிப்பான். திருமுறைக்காலத்து சைவ சமயநிலையை உருவாக்கப் பெரிய புராணம் ஒன்றே போதும். நமது சமயவாழ்வோ, சமய அனுபவமோ சேக்கிழார் அளவுக்கு இல்லை. சேக்கிழார் சுந்தரர் வாழ்வை உலக நடைமுறைப்படுத்தினர். இன்று கண்ணப்பர் காலமில்லை. ஆதலால் கண் தேவைப்படாது. தேவைப்படினும் கண்வங்கிகளில் பெற்றுக்கொள்ளலாம். கண்ணப்பர் குருபூசை நாளன்று கண்பார்வை இழந்தவர்களுக்குக் கண்ணாடி வாங்கிக்கொடுக்கலாம். (இயற்கை நாயனர் குருபூசையின்போது வசதிஇல்லாமையினாலே திருமணமாகாதிருக்கும் ஏழைகள் நாலுபேருக்கு கோவிலிலே திருமணம் செய்து வைத்தாற் போதும். திருக்குறிப்புத் தொண்டர் திருநாளில் ஏழைக்கு உணவுப் பாத்திரம் கொடுக்கலாம்: ஏழை பணக்காரர் என்ற பாகுபாட்டினை மாற்றவேண்டும்.) பிட்டுக்கு மண் சுமந்தான் என்பதை, மண்சுமந்தான் பிட்டுக்கு என்று மாற்ற வேண்டும். இக்காலத்தவர் பிட்டுக்கு மண்சுமந்த கதையைப் படித்துவிட்டுப் பிட்டை உண்கிறார்களே யொழிய, மண்சுமத்தலை நினைப்பதில்லை. எனவே தொண்டை முன்னும் உண்டியைப் பின்னுமாக மாற்றிக் கொள்ளவேண்டும். இன்று கிணறு தோண்டல் வீதி அமைத்தல் ஆகிய சிரமமான முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம். சுவாமியை வீதிவலமாக எழுந்தருளச் செய்து, கொண்டுபோய்வைத்து பிட்டினைத் திருமுன் நிவேதித்துச் சிரமதானத்தின் பின்பு புனிதமான பிரசாதமாக உண்ணலாம். கற்பனைக்கு அப்பாலான வாழ்க்கை அனுபவந்தான் பெரிய புராணம். வான் முகில் வழாதுபெய்து, நீர் வளம்பெருகி, மலிவளம் சுரந்து, அரசு அருள்நெறி வழிப்பட்டு இயங்கி, யாதொரு குறையுமின்றி உயிர்கள் வாழ்தலே சாலச் சிறந்ததாகும் எனக்கூறி வாழ்த்தி விடைபெறுகின்றோம். வணக்கம்.

# தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அரிய நூல்கள்

**சொல்லமுதம்** 4-00

*அமுதத்தை உண்பவர்கள் சாகாவரம் பெற்றார் கள். சொல்லமுதம்பருகுபவர்கள் செந்தமிழின் இனிமைதனைச் சுவைப்பார்கள். இந்த நூல் கட்டுரை வரிசையிலே ஒரு கற்கண்டு!*

**மண்ணும் விண்ணும்** 4-00

*நல்ல நல்ல தத்துவங்கள்! நற்பயனுள்ள கருத்துக்கள். எண்ணத்திலே தோன்றுகின்ற எழுச்சி மிக்க சிந்தனையை வண்ணக் கலவை யாக்கி தேன் தமிழில் தந்துள்ளார்.*

**முத்து மொழிகள்** 3-00

*சிதறி இருந்த முத்துக்களைச் சேர்த்தது இந்தச் சரம்! அத்தனையும் அறிவுக் கொத்துக்கள்! அடிகளார் அருளிய பொன் மொழிகள்.*

**அமுதமொழிகள்** 2-00

*தென்றலின் சுகம்-தேனின் இனிமை-மல்லி கையின் மணம்-ஒவ் ஒன்றும் ஒவ் ஒரு விதத் திலே இன்பம் பெறச் செய்வது! மூன்றும் கிடைக்கின்ற இன்பம் இந்நூலிலே இருக் கிறது! கருத்துக் குவியல்களின் தொகுப்பு.*

தமிழ்ப்பண்ணை

தியாகராய நகரம். சென்னை-17